குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | பிரமோதூத ஆண்டு ஆனி, திங்கள் 10-7-90 | இதழ் 8

ஆடிவெள்ளியை முன்னிட்டு



திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருக்கடவூர்
அருள்மிகு அபிராமி அம்பாள் காட்சி அருள்கிறார்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

அண்ணலைப்போ லாநந்த
மான்மாவிற் குண்டாகில்
எண்ணில் பிறப்பிறப்பை
யெய்துமோ — கண்ணிருளை
ஓட்டாதோ ஆதவனுக்
கொத்தவொளி யுண்டாகிற்
கேட்டதுபோகேட்டிலையேற்கேள்.

— முத்தி நிச்சயம் 12

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | 10-7-90 | இதழ் 8

உட்பொருள்

எண்		பக்கம்
1	வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி வற்றியது ஏன்?	... 353
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 357
3	கீழே படியுங்கள்	... 367
4	குருபூஜை விழாவின் பொருட்டுப் பாடிய கவி	... 369
5	நோஸ்ட்ராடமஸ் தீர்க்க தரிசனங்கள்	... 370
6	விழுமப் சாரி கல்வியில் சமயத்தைப் பயிற்று வித்தலின் அவசியம்	... 377
7	மணிக்கடலில் முகந்த சிலமுத்துக்கள்	... 382
8	கேன்சர் நோயைத் தடுக்கும் மஞ்சள்	... 385
9	போதமும் சித்தியும்	... 386
10	பூசலார், மானியார், நேசர்	... 388
11	செய்திகள்	... 393
12	எதிர்காலம்	... 396
13	இதழ்வழிச் சைவசமயக் கல்வி V, பாடம்-3	... 401

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 8

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரமோதூத - ஆனி - 10—7—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி வற்றியது ஏன் ?

காவிரி ஏன் வற்றியது ?

'யானை வரும் பின்னே! மணி ஓசை வரும் முன்னே' என்ற பழமொழி நாம் அறிந்த ஒன்றே; எந்த ஒரு நிகழ்வுக்கும் முன்னே அதன் அறிகுறிகள் தென்படும் என்பது இப் பழமொழி விளக்கி நிற்கும் பொருள். வேறு ஒரு பழமொழியும் மக்கள் வழக்கில் உள்ளது. 'கேடு வரும் பின்னே! மதி கெட்டு வரும் முன்னே!' என்பதே அது. இவ்விருபழமொழிகளும் ஆழ்ந்த நோக்குடையன. நாம் தவறுகளைச் செய்யத்தொடங்குகின்றோம் என்றால், பின்னே கெடுதல்வரக் காத்திருக்கிறது என்பதை உய்த்துணர வேண்டும். வினைக்கும் (செயல்) விளைவுகளுக்கும் இடையே மாறாத தொடர்பு உண்டு என்பது தத்துவம் காட்டும் உண்மை. வள்ளுவரும்,

"கெடுவல்யான் என்ப தறிக, தன்னெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்"

என்று அழகுற விளக்கிப் போந்தார். இன்று காவிரிவற்றித்தஞ்சை மாவட்டம் தரிசாகக் கிடப்பதற்கு அரசியல் காரணங்கள் இல

இருப்பினும், ஆட்சியாளர் மற்றும் பொதுமக்களிடம் தார்மீக, நல்லறப் பண்புகள் குறைந்து போனதே அடிப்படைக் காரணமாகத் தோன்றுகின்றது.

இமாலயத் தவறு !

புறநானூற்றில் குடபுலவியனார் என்ற புலவர் பாடிய பாடல் ஒன்று உண்டு. பள்ளமான நிலப் பகுதிகளில் எந்த ஒரு மன்னன் தண்ணீரைத் தேக்கி வைக்கிருனோ, அவனே, மக்கள் உடலோடு உயிரைச் சேர்த்து வைத்தவன் ஆகின்றான் என்பது அப்பாடல் விளக்கும் தலையாய கருத்து.

“ நீரின்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்!
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே!
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே!
... ...
நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம! இவண் தட்டோரே!
தள்ளா தோரிவண் தள்ளா தோரே! ”

காவிரியில் பெருக்கெடுத்து வரும் வெள்ளநீரை மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தேக்கி, தமிழகத்தை வாழவைக்கும் ஒப்பந்தத்தை உரிய நேரத்தில் விழிப்போடு புதுப்பிக்கத் தவறிய பிழை இன்று தஞ்சையைத் தரிசாக ஆக்கிவிட்டிருக்கிறது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 இல் செயல் இழந்தது. அன்றே உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியது இமாலயத் தவறாக முடிந்துவிட்டது.

அரசியல் விருப்பு வெறுப்புக்கள் :

‘இந்தியா ஒரேநாடு; இந்தியர்கள் அனைவரும் சகோதரர்கள்; தேசிய ஒருமைப்பாடு மலர உயிரையும் கொடுப்போம்’ என்று நம்மவர்கள் குரல் எழுப்புகின்றனர். பல மாநிலங்களின் வழியே ஓடிவரும் ஆறுகளைக்கூட இன்று வரை நாம் தேசிய உடைமையாக அறிவிக்கவில்லை. அந்தந்த மாநிலங்களே, அவ்வப் பகுதியில் பாயும் ஆறுகள் மேல் உரிமை கொண்டாட அனுமதித்தோம். 1974க்குப் பின் மைய அரசில் ஆட்சிபீடம் ஏறியவர்கள் முறையான முயற்சி மேற்கொண்டிருந்தால் இன்று நடுவர் மன்றம் அமைக்கத் தேவையே இராது. மத்தியில் ஒரு கட்சி; மாநிலங்களில் வேறு வேறு கட்சிகள் என்ற நிலையில், அரசியல் விருப்பு வெறுப்புக்கள் காரணமாகக் காவிரிப் பிரச்சனை வேண்டுமென்றே தீர்க்கப்படாது இழுத்தடிக்கப் பட்டதை நடுநிலைச் சிந்தனையாளர்கள் நன்கு

அறிவர். புதிதாகக் காவிரியில் கபினி, ஹேமாவதி அணைகளைக் கர்நாடக அரசு கட்டியபோது அம்முயற்சியைத் தடுத்த நிறுத்த மாநில - மத்திய அரசுகள் முயற்சி மேற்கொள்ளவில்லை. புதிய பாசனப் பகுதிகளைக் கர்நாடகம் விரித்துக் கொண்டது. உரிய பாசனப் பகுதிகளுக்கும்கூட தமிழ்நாடு காவிரி நீரை இழந்தது.

ஆட்சியாளரும் அறப்பண்பும் :

காவிரி வற்றியது ஒருபுறம் இருக்கட்டும். மாதம் மும்மாரி மழை பொழிந்து நாடு செழித்திடக் கூடாதா என்ற எண்ணம் எழுகிறது. மழை இறைவனின் கருணை வெளிப்பாடு என்பதைத் திருக்குறளும் எடுத்துக் காட்டுகின்றது. இயற்கையின் விளைவுகளுக்கு ஆட்சியாளர்களின் நல்லறப் பண்புகளோடு தொடர்பு உண்டு என்பதை முன்னோர் பலபடக் குறித்துள்ளனர்.

> "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
> காவலன் காவான் எனின்"

என்பார் திருவள்ளுவர்.

> "முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
> மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்"

என்பார் திருமூலர். 1974 இல் நாம் காவிரி நீர் உரிமையை இழந்தோம். 1972 இல் ஆட்சியாளர்கள் தமிழ்நாட்டு அறநிலையங்களுக்கும் திருக்கோயில்களுக்கும், குத்தகைதாரரர்களிடமிருந்து வரவேண்டிய பலகோடி ரூபாய்ப் பாக்கியை ஒருதலைப்பட்சமாகத் தள்ளுபடி செய்து உத்தரவிடுகின்றனர். அரசு, தனக்குச் செலுத்தப்படவேண்டிய பாக்கியைத் தள்ளுபடி செய்தால் அது புரிந்துகொள்ளக்கூடியது. அறநெஞ்சம் கொண்ட முன்னோர் வழங்கிய அறச்சொத்துக்களால் - இப்போதைய அரசின் உதவி ஏதும் இன்றிப் பராமரிக்கப்படும் அறநிலையங்களின் பாக்கியைத் தள்ளுபடி செய்ய அரசுக்கு நியாயமான உரிமை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆட்சியாளரின் நடுநிலைப்பண்பு வற்றிவிட்ட போது, காவிரிவற்றி, மழை வளம் சுரந்தனை எவ்வாறு குறைகூற இயலும்! அரசுமட்டுமா? அரசின் அரவணைப்பில் வாழும் மக்களும் அல்லவா அறவுணர்வு சற்றும் இன்றி ஆலயச் சொத்துக்களை, அனுபவிப்பதோடு அதன் வருவாயில் 25 விழுக்காடும் கூடக் கொடுக்காமல் அனுபவிக்கிறார்கள், அவர்கள் உள்ளத்தில் அறம் வற்றிவிட்டதே; காவிரி வற்றியதற்குக் காரணம்.

நடுநிலை தவறினோம் :

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்று பழமொழி கூறுகிறதே!

" தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே '

'உண்டாலம்ம இவ்வுலகம்' எனச் சான்றோர் செய்யுள் பேசிக் காட்டுகிறதே! ஆட்சியாளர்கள் கிடக்கப்படும்! மக்களின் நல்லறப் பண்புகளுக்காக இயற்கை மனமிரங்கக் கூடாதா? நியாயமான வினா! நாளும் நாளும் கல்வியிலும், செல்வத்திலும், புதிய கண்டு பிடிப்புகளிலும் உயர்ந்துவருகிறோமே அன்றி நடுநிலைப்பண்பிலும், நல்லொழுக்கத்திலும் நற்பண்புகளிலும் நாம் உயர்ந்து வருகிறோம் என்று கூற இயலுமா? அறச்சொத்துக்களை அனுபவித்து வருகிற வர்கள், ஆலயங்களுக்கு வழங்க வேண்டிய குத்தகை அளவு மிக மிகக் குறைவு 20 கலம் விளையும் ஒரு மா, நிலத்திற்கு ஆண்டுக் குத்தகை இன்றைய சட்டப்படி 5 கலம் கொடுக்க வேண்டும். இரண்டு கலம் கூடக் கொடுப்பது இல்லை இந்த அளவு கூட வழங்க மனம் வற்றி விட்டபோது இயற்கைமேல் சீற்றம் கொண்டு என்ன பயன் விளையும்? சிந்திப்பார்களாக! திருந்துவார்களாக!

முயற்சிகள் வெல்க :

காவிரிப் பிரச்சனைமேல் உச்சநீதி மன்ற ஆணைவழி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது ஆறுதல் தருகிறது. நடுவர் மன்றத் தீர்ப்பு தமிழகத்திற்குச் சாதகமாக இருக்கக்கூடும் என்று அறிந்த கர்நாடக அரசு நடுவர் மன்றத்தைத் தவிர்க்கப் பலவாறுமுயன்று வருகிறது கலைஞர் மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதியவர்களின் தலைமையிலான அன்றைய அரசே காவிரி ஒப்பந்தத்தை 1974 இல் புதுப்பிக்கத் தவறி விட்டது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது. தற்போது அந்தத்தவற்றைமாற்றி அமைக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது மத்தியிலும் திராவிடமுன்னேற்றக் கழகம் பங்கேற்றிருக்கும் தேசிய முன்னணி அரசு ஆண்டுவருகிறது. முதல்வரின் பிறந்த மாவட்டம் தஞ்சை மாவட்டம். எனவே, மிக விரைந்து தமிழ் நாட்டுக்குப் பெரிதும் வாய்ப்பான காவிரி நீர்ப் பங்கீட்டுக்குக் கலைஞர் பெருமுயற்சி மேற்கொள்ள வேண்டும். இம் முயற்சி வெற்றிபெறக் கட்சி வேறுபாடின்றி எல்லாரும் முழு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். மக்களும் நல்லறப் பண்புகளில் தலைநிற்கவேண்டும். காவிரிநீர் உரிமை தமிழகத்துக்கு உரியவாறு அமைய, தமிழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு "ஞானசம்பந்தம்" நல்வாழ்த்துக் கூறுகின்றது.

காவிரி பெருகக் கடமை புரிவோம்!

காவிரிப் பெருக்கால் நெற்கதிர்களைப் பெறுவோம்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவையாற்றில் நடைபெற்ற திருமுறை வேள்வியில்
ஆருந்திருமுறை முற்றோதல் நிறைவில்
வழங்கியருளிய

ஆசியுரை

23—6—1990

" எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி என் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ "

— அப்பர்.

ஆதிரைநாள் உகந்தான் !

இன்று திருவாதிரைத் திருநாள். ஆதிரை நாள் இறைவனுக்கு உவப்பானது என்பது, நான்காம் திருமுறையில் காணப்பெறும் " வார்தரு பூங்குழலாளை மருவி உடன்வைத்தவனும், ஆர்திரை நாளுகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே, என்னும் அப்பர் சுவாமிகள் திருவாக்கினாலும், ஆறும் திருமுறையின் நிறைவுப் பதிகத்தின் இரண்டாம் பாடலில், " அங்கமே பூண்டாய் அனலாடினாய் ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனேறூர்ந்தாய் " என்னும் குறிப்பினாலும் உணரலாம். ஆர்திரை என்பதே ஆதிரை எனமருவியது என்பது " ஆர்திரையான் ஆர்திரையான் " என்னும் முத்தொள்ளாயிரக் கடவுள் வாழ்த்துப் பாடலாலும் தெளியலாம்.

திருவாதிரைத் திருப்பதிகம் :

அப்பர் சுவாமிகள் நான்காம் திருமுறையில் காணப்பெறும் ''முத்துவிதானம்'' என்னும் திருவாரூர்ப் பதிகம் முழுமையும் இறைவனுக்குகந்த ஆதிரைநாள் விழாச் சிறப்பினையே அருளியுள்ளார். அப்பதிகத்திற்குத் ''திருவாதிரைத் திருப்பதிகம்'' என்றே பெயர் அமைந்துள்ளது. அப்பதிகத்தில், ஒவ்வொரு பாடலிலும் இறுதி வரி, ஆதிரை நாளால் அதுவண்ணம் என்று அமையுமாறு அருளியுள்ளார். இங்ஙனம் அப்பர் சுவாமிகள் வாக்கால் ஆதிரை நாட்சிறப்பை ஆதிரையில் தோன்றியருளிய திருஞானசம்பந்தர் கேட்டுமகிழ்ந்தார் திருப்புகலூரில். திருஞான சம்பந்தர் அவதரித்த திருநாளும், அவருக்கு ஞானப்பால்அளிக்கப் பெற்ற திருநாளும் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராண அரங் கேற்றத்தைத் தொடங்கிய திருநாளும் நிறைவு செய்த திருநாளும் திருவாதிரைநாளே. எனவேஇத்திருநாள், சைவசமய வரலாற்றில் இன்றியமையா இடம்பெற்றது. ஆதலின் தொடர்ந்து இந்நாளில் திருமுறை முற்றோதல் நிகழ. இறையருள் கூட்டுவித்துள்ளது. ஒவ்வொரு மாதத்தின் திருவாதிரைநாளிலும் ஒவ்வொருதலத்தில் ஒரு திருமுறை முற்றோதல் நிகழ்ந்து வருகிறது. அந்நிகழ்வுப்படி அப்பருக்குக் கயிலைக் காட்சியருளிய தென்கயிலாயமாகிய திருவையாற்றில் இன்று ஆறும் திருமுறை முற்றோதல் நிகழ்ந் துள்ளது. இனி, இத்திருமுறையின் அமைப்புக்குறித்தும் இத்திரு முறையிலுள்ள ஒன்றிரண்டு பதிகங்களில் உள்ள பாடல்கள் குறித்தும் சிந்திப்போம்.

நாவரசரின் இயல் தமிழ் :

திருநாவுக்கரசர் இயற்றமிழிலும் இசைத்தமிழிலும்பாடல்களை அருளியுள்ளார். திருஞானசம்பந்தர் தாம்பாடிய 3 திருமுறைப் பதிகங்களையும் பண் அமைப்பிலேயே பாடியுள்ளார். மூன்று திருமுறைகளிலுமாகச் சம்பந்தர் 24 பண்கள் பொருந்திவரப் பாடியுள்ளார் அதனால்தான் அவரைப் போற்றிய சுந்தரர், ''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' என்று குறித்தார். திருநாவுக்கரசர் அருளிய நான்காம் திருமுறைப் பதிகங்கள் பண் அமைதி உடையன. 10பண்கள் அத்திருமுறையில் காணப்பெறுகின்றன. ஐந்தாம் திருமுறை, 'குறுந்தொகை' என்னும் யாப்பமைவும், ஆறும் திருமுறை 'தாண்டகம்' என்னும் யாப்பமைவும் உடையன. எனவே அப்பர் அருளிய 4ஆம் திருமுறை இசைத்தமிழ் என்றும் 5, 6ஆம் திருமுறைகள் இயல்தமிழ் என்றும் குறித்துரைலாம்.

தாண்டக வேந்தர் :

'தாண்டகம்' என்னும் யாப்புக் குறித்த இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், யாப்பருங்கல விருத்தி என்னும் இலக்கண நூல்களிலிருந்து அறியலாம். ஒவ்வொரு அடியிலும் அறுசீரோ எண்சீரோ அமைய ஆடவரையோ அல்லது கடவுளையோ நான்கடியால் போற்றிப்பாடுவது தாண்டகத்தின் இலக்கணம். அவற்றுள் அறுசீரான் அமைவது குறுந்தாண்டகம்; எண்சீரான் அமைவது நெடுந்தாண்டகமாம். இக்கருத்தினைப் பன்னிரு பாட்டியல்,

" மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளரைப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர்குறியது, நெடியது எண்சீராம் "

என்று கூறுகிறது.

தமிழிலக்கிய வரலாற்றில் முதன் முதல் தாண்டக யாப்பில் பாடல்களை அருளிய அப்பர் சுவாமிகளைத் " தாண்டகச் சதுரர் " என்று சேக்கிழார் சுவாமிகள் போற்றுகின்றார்.

" தலைவராம் பிள்ளையாரும் தாண்டகச் சதுரராகும்
அலர்புகழ் அரசுங்கூட அங்கெழுந்தருளக் கண்டு "

என்பது பெரியபுராணப் பாடல் பகுதி. இந்நிகழ்ச்சி திருக்கடவூரில் குங்குலியக்கலயர் திருமடத்தில் இருபெருமக்களும் எழுந்தருளி யதைச் குறிக்குமிடத்தில் சேக்கிழார் காட்டுப்சித்திரம். தாண்டக யாப்பிற்குத் தந்தையாக இலங்கும் அப்பர் சுவாமிகளைப் பின்னே வந்த சிவப்பிரகாசரும் நால்வர் நான்மணி மாலையில், "தாண்டக வேந்தர்" என்று போற்றுகிறார். "வெள்ளேறு உடையான்தனக்கு அன்பு செய்திருத்தாண்டக வேந்த!" என்பது அவர் வாக்கு.

தில்லைப் பதிகம் :

ஆறும் திருமுறையின் முதலில் உள்ள திருப்பதிகம் தில்லையில் அருளிய 'அரியானை அந்தணர் தம் சிந்தையானை' என்பது. தில்லை எல்லாத் தலங்களிலும் சிறந்தது. ஏன் எனில் அது ஆகாயத் தலமாக விளங்குகிறது. ஆகாயத்தலம் என்பதனால் என்ன சிறப்பு இருக்கிறது என்று சிந்தித்தால் ஆகாயத்தில்தான் எல்லா உலகங்களும் அடங்கி இருக்கின்றன. ஆதலின் ஆகாயத் தலம் சிறந்தது ஆகிறது. இத்தில்லைப் பதிகம் குறித்தே முதன் முதல் சிந்திப்போம். " அரியானை அந்தணர்தம் சிந்தையானை " ... என்று தொடங்கும் அப்பதிகம் ஒவ்வொரு பாடலிலும், "பெரும் பற்றப்புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே " என்ற

மகுடம் அமைய அருளியுள்ளார் நாவுக்கரசர். பிறந்த நாள் எது? பிறவா நாள் எது? என்று சிந்திக்க வேண்டும். பயனுடைய நாள் பிறந்த நாள்; பயன் இலா நாள் பிறவா நாள் எனவே இறைவனை வழிபடும் நாள், பயனுடைய நாள் - பிறந்தநாள் - சிறந்த நாள்; வழிபடா நாள் பிறவா நாள் - பயன் இலா நாள் - சிறப்பில்லா நாள் என்பது தெளிவாகிறது. இத்திருமுறை யிலேயே அப்பர் சுவாமிகள், வேளூர்த் தாண்டகத்தில் "பேராயிரம்பரவி" — என்னும் பதிகத்தில், இறைவனைப் போற்றிப் பயன் பெறுமல் 'போற்றுதே ஆற்ற நாள் போக்கினேனே' என்று இரக்கம் கொள்கின்றார். எனவே தொடர்ந்து இடையறவு படாமல் இறைவனை வழிபட்டால் பெரும் பயனைவிரைவில் பெறலாம் என்பது கருத்து. இப்பாடலில், 'பிரிவிலா' அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பான் என்கிறார். வாராத செல்வம் என்பது முத்திப் பேற்றைக் குறிக்கிறது. தீரா நோய் என்பது பிறவி நோயைக் குறிக்கின்றது. எனவே பிறவி நோயாகிய துன்ப நீக்கத்தையும் முத்திப் பேருகிய இன்ப ஆக்கத்தையும் இடையரு வழிபாட்டினுல் பெறலாம் என்றுகூறி, இப்படிஇருந்தும் பல ஆண்டுகள் போற்றுதே போக்கினேனே என்று இரங்குகின்றார்.

அரியவன் – எளியவன் :

இறைவன், எண்ணுவதற்கும் மொழிவதற்கும் அரியவன் இதனை "அரியானை" என்றார். அவன் மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன் என்பார் மாணிக்கவாசகர். இத்தகைய அரியவன் மனித உயிர்களில் தகுதி வாய்ந்தவர்களின் உள்ளத்தில் விளங்கித் தோன்றுவான் என்பார், 'அந்தணர்தம் சிந்தையான்' என்றார். எனவே அவன் யாருக்கு அரியவன்; யாருக்கு எளியவன் என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும். எல்லா உயிர்கள் மாட்டும் இரக்கம் உடைய நல்லோருக்கு எளியன்; அஃதில்லாதார்க்கு அரியவன் தான் என்கிறார். அந்தணர் என்போர் அறவோர் என்பது வள்ளுவர் கருத்து. அறநெஞ்சு உடைய அனைவருமே அந்தணர் தான் அவர்களுக்கு எளியனாய் வந்து அருளுகின்றான்' இத்தகைய எளியவனை நாமாகச் சென்று அடைதல் இயலாது; அவனாக இரங்கி - இறங்கி வந்து அருளினால் உய்யலாம் என்பது சமயச்சான்றோர்கருத்து.

முழுதும் கண்டார் யாருமில்லை :

அவன் இரங்கிவரும் பொழுதும் அவனை முழுமையாகக் கண்டோர் யாரும் இல்லை. அவனைக் கண்டு மகிழ்ந்தோர் சமயாசாரியர்களைப்போன்றோராவர். மாணிக்கவாசகர், 'கண்ணும் யானும் கண்டேன் காண்க' என்று கூறியவர், "கேட்டறியோம்

உன்னைக் கண்டறிவாரை " என்றும் மொழிகின்றார். இதன் நுட்பம் என்ன? இறைவனைக் கண்டவர்கள் கூட அவன் தன்மை முழுமையையும் கண்டதில்லை. அது எது போல எனின், ஒருவன் கடல் நீரில் மூழ்கிக் குளிக்கின்றான். அந்நீரில் மூழ்கி அனுபவிக்கின்றான். அது உண்மை தான், ஆனால் கடலின் ஆழம் அகலம் அதில் விளையும் பொருள்கள், அனைத்தும் அவனுக்குத் தெரியும் என்பது இல்லை. அது போல்தான் இறைவனை மெய்யடியார்கள் கண்டு அனுபவிப்பதுஉண்மை, ஆனால் இறைவனது முழுத்தன்மையையும் உயிர்கள் அறிய மாட்டா; என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ஒன்றாய், வேறாய், உடனாய் உதவுவோன் :

இவற்றை எல்லாம் நினைந்து அப்பரடிகள், " அரியானை, அந்தணர்தம் சிந்தையானை, அருமறையின் அகத்தானை, அணுவை, யார்க்கும் தெரியாத தத்துவனை ..." என்கின்றார். இத்தகைய தத்துவன், தேனாக, பாலாக, திகழ்ஒளியாக, தேவர்கள் தம் தலைவனாக, திருமாலாக, நான்முகனாக, தீயாக, காற்றாக, கடலாக, மலையாகக் கலந்து நிற்கின்றான் என்றும் அவன் மிகப் பெரியவன் என்றும் பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளியுள்ளான் என்றும் அருளுகின்றார் திருநாவுக்கரசர். இப்பாடலில், அரியானை என்பது இறைவன், உயிர்க்கு வேறாக இருந்து உதவும் தத்துவத்தையும், தேனைப் பாலை என்பது இறைவன் உயிர்க்குயிராய் உடனிருந்து சுவையாய் உதவும் தத்துவத்தையும், அந்தணர் தம் சிந்தையான் முதலாக அனைத்திலும் கலப்பினால் ஒன்றாய் இருந்து உதவும் தத்துவத்தையும் விளக்கியுள்ளார்.

துறந்தோர் உள்ளப் பெரும்பயன் :

இப்பதிகத்தின் வரும் பயனை என்னும் ஏழாவது பாடலில் இறைவன், துறந்தோர் உள்ளப் பெரும் பயனாக இருக்கின்றான் என்கின்றார். மண், பெண், பொன் என்னும் பொருள்களிடத்துள்ள நிலையாத பொய்யான மூவாசைகளைத் துறந்து அதன் வளர்ச்சி நிலையில் மெய்யுணர்ந்தோரின் உள்ளத்தில் பெரும் பயனாய் விளங்குகின்றான் இறைவன் என்பதை அனுபவவாயிலாக உணர்த்துகின்றார்.

" கரும்பமரும் குழல்மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோர் உள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே "

என்பது அவ்வனுபவப் பாடற் பகுதியாகும்.

இவ்வாறும் திருமுறையிலுள்ள அனைத்துப் பதிகங்களையும் சிந்திக்க ஈண்டுஇயலாது ஆதலின் இன்னும் ஒன்றிரண்டுபதிகங்களை மட்டும் சிந்திப்போம்.

ஐயாறும் ஏகம்பமும் :

இவ்ஐயாற்றில் பாடிய "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்ற பதிகத்தில், "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்ற அப்பர் சுவாமிகள் அடுத்து "ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே" என்று அருளுகிறார். ஐயாற்றில் நிற்போருக்குத் திடீரென்று காஞ்சிபுரம் நினைவுக்கு வருவானேன்? என்று எண்ணத் தோன்றும். ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை புலனாகும். ஐயாறும் பிருதிவித்தலம். காஞ்சிபுரமும் பிருதிவித்தலம். இங்கு நின்று வழிபடும் பொழுது மற்றொரு பிருதிவித்தலமாகிய காஞ்சிபுரம் நினைவுக்குவர அதனையும் போற்றுகிறார். இதுபோன்ற அனுபவம், அருளாளர்களுக்கு வருவது இயல்பு, மாணிக்கவாசகரும், இப்பிருதிவித்தலங்கள் இரண்டையும் இணைத்து "ஆரூர் அமர்ந்த அரசே போற்றி; சீரார் திருவையாறு போற்றி" என எதுகை நயம்படப் போற்றியுள்ளார். ஆரூரும் ஐயாறும் பிருதிவித்தலங்கள் ஆகும். பிருதிவி-மண்.

கயிலைத் தரிசனம் கட்டிய தலம் :

உருண்டும், புரண்டும், ஊர்ந்தும் கயிலை சென்ற அப்பரின் கைகால்கள் தேய்ந்தன, உடல் சோர்ந்து கிடந்தார், அப்போது கயிலைப்பிரான் முனிவர் வடிவில் தோன்றி மானிடரால் அடைய இயலாத கயிலையை நீர்காண முடியாதே என்ற போது "ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும்இவ்வுடல் கொண்டுமீளேன்" என்ற அப்பரின் உறுதிகண்டு ஒருதடாகத்தைத் தோற்றுவித்து இதில் மூழ்கித் திருவையாற்றில் நமது கயிலைக் காட்சியைக் காணபாயாக, என்றார் கயிலாயநாதன், அவ்வண்ணமே தடாகத்தில் மூழ்கி ஐயாற்றுப் பொய்கையில் எழுந்து ஐயாற்றில் கயிலைநாதனை அம்மை அப்பராகக் கண்டு, சராசரங்கள் எல்லாம் அம்மையப்பராகக் காட்சி தந்த கருணையை நம் போன்றார்க்கும் "மாதர் பிறைக் கண்ணியானை" என்ற பதிகத்தால் உணர்த்தியருளினார். அதன் பிறகு வேற்றாகி முதலான போற்றித் திருத்தாண்டகப் பதிகங்கள் மூன்றும், "ஆரார் திரிபுரங்கள்" ஓசைஒலியெலாம்என்றஇருதாண்டகப் பதிகங்களும் ஓதியருளினார்

யோகநெறித் தியாகேசன் :

அப்பர் சுவாமிகள் அருளிய திருவாரூர்த் தாண்டகம் யோக நெறியை உணர்த்தும் சிறப்புடையது ஆரூர் மூலாதார க்ஷேத்திரம் என்பதும், சுந்தரருக்கு யோகநெறியருளியது என்பதும்

சிந்திக்கத்தக்கது. "உயிராவணம்இருந்து உற்றுநோக்கி" என்று தொடங்கும் தாண்டகம் அது. யோகமார்க்கத்தில் இறைவனை அடைந்துய்ந்த சுந்தரர் வரலாற்றில் மிகுந்த இயைபுடைய ஆரூர், யோகநெறி காட்டும் தலமாக இலங்குவதில் வியப்பில்லை. அதனால் அப்பர் அடிகள் இத்தலத் திருத்தாண்டகத்தில் யோக நெறியினை விளக்கியருளுகிறார், மங்கையோடு இருந்தே யோகு செய்யும் அம்மணாளனை, உயிர், எங்ஙனம் ஒன்றியிருந்து வழிபட வேண்டும் என்று இதில் கூறுகிறார். உயிர்க்காற்றை அடக்கி உற்றுநோக்கி, உள்ளம் எனும் கிழியில் இறைவனின் திருவுருவத்தை எழுதி, அதன்முன்பு உயிரையே ஆவணம் செய்துதந்தால் - அதாவது மீளா அடிமை உனக்கு என ஓலை எழுதித் தந்தால், தன்னை உணரும்சிறப்புடையாரோடு இணைந்தருளுவன் இறைவன் என்பது கருத்து. ஆயிரம் கொம்புகளைக் கொண்ட யானையாகிய அயிராவணத்தில் ஏறுது ஆனேறு ஏறி, அமரர்நாடு ஆளாது ஆரூர் ஆண்ட அயிராப்வணமாக இலங்கும் இறைவனே! என் அம்மானே! நின் அருட்கண் துணையின்றி யார் எது செய்ய வல்லார்? என்று கேட்டு அருளுகின்றார். இப்பாடலில் நுட்பமான பல கருத்துக்கள் உள்ளன "உயிரை அடிமை ஓலை எழுதி இறைவனிடத்துத் தருதல்" என்றால், தன்னை - தன் முனைப்பை - தன்செயலை அறவே மறந்து, துறந்து இனி எல்லாம் நீயே என்று சரண்புகுதல். இதனை, மாணிக்கவாசகர் தன் அனுபவமாகத் திருப்பெருந்துறையில் குருந்தமரநீழலில் இறைவன் குருநாதராக இருந்து காட்சிதந்தபொழுது உயிரை அர்ப்பணித்ததாகக் கூறுகிறார். "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ- இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்ற அருளுகின்றார். உயிர், உடல், உடைமை அனைத்தையும் ஆண்டவன் கொண்டான் என்கிறார். ஆவி, உடல், உடைமை எல்லாம் என்பதில்லாமல் 'எல்லாமும்' என்று முற்றும்மை கொடுத்துக் கூறியிருப்பதனால் இனி என்னிடம் ஏதும் இல்லை என்பது பொருளாயிற்று. இங்ஙனம் அர்ப்பணித்தலே, 'உயிர்ஆவணம் செய்து உன்னைத்தருதல்' என்பது. சுந்தரரும் திருவாரூர்த் தேவாரத்தில், "மீளா அடிமை உமக்கே ஆளாய்............" என்று அருளியிருப்பதும் இக்கருத்தையே உணர்த்துகிறது.

பாரதியாரின் பண்பு :

பின்னேவந்த பாரதியாரும் "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று கூறியிருப்பது இறைவனிடத்து

உயிர் மீளா அடிமைநிலையில் ஒப்படைக்கப்படவேண்டியது என்னும் பொருளது. அடிமை இந்தியாவில் சுதந்திரம்பற்றிப் பாடுவதையே தன் உயிர்மூச்சாகக்கொண்டு வாழ்ந்த பாரதியாரும் மனிதனுக்கு மனிதன் அடிமையாய் இருத்தல் கூடாதேதவிர இறைவனிடத்து உயிர் அடிமையாய் இருக்கவேண்டும் என்று உணர்ந்து பாடியுள்ளார். அவர்பாடலில் இன்னுமொரு குறிப்பும் உளது. இப்பூவுலகில் எந்த மனிதனுக்கும் அடிமையாய்வாழாது உண்மைச் சுதந்திரனாக வாழ்தல் எப்பொழுது கைகூடும் எனின், பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழும் பொழுதுதான் என்கிறார். எனவே சமய வாழ்வு ஒன்றே ஒருமனிதனைச் சுதந்திரனாக வாழ வைக்கும் என்பது அறியவேண்டிய உண்மையாகும்.

ஈண்டு, ''உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி'' என்பது அடியார்களுடன் உடனாய் இருந்து அருளுகின்றான் என்னும் கருத்துடையது. இதுவே யோகநெறி ஆகும். ஒட்டுதல் யோகம் ஆம். 'ஏகபோகமாய் நீயும் நானுமாய்' என்று அருணகிரிநாதர் குறிப்பது ஈண்டுநினையத்தகும். அடுத்து இந்தப்பாடலில், ''அயிராவணமே என் அம்மானே' என்பதில் ''அயிராவணமே!'' என்றதற்குப் பொருள் நுண்மணலால் ஆகிய வடிவத்தையுடையவனே என்பதாகும். 'அயிர்' என்னும் சொல்லிற்கு நுண்மணல் என்பது பொருள். அந்த நுண்மணலையே உண்டுவாழும் மீன்தான் அயிரை மீன். எனவே நுண்மணலால் ஆகிய திருவுருவத்தையுடையவனே என்பார், 'அயிராவணமே' என்றருளினர், இக்கருத்துக்களுடைய பாடல்,

''உயிராவணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக்கிழியின் உரு எழுதி
உயிராவணஞ் செய்திட்டு உன்கைத்தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி
அயிராவணம் ஏறாது ஆனேறு ஏறி
அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே என் அம்மானே நின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே''

என்பது. இப்பாடலில், ''அயிராவணம் ஏறாது ஆனேறு ஏறி, அமரர்நாடுஆளாது ஆரூர் ஆண்ட இறைவன்' என்பதால் அவன் தனக்குரிய வாய்ப்பு வசதிகளை எல்லாம் விட்டு விட்டு மன்னுயிர்களை ஈடேற்றும் பொருட்டு இந்த மண்ணுலகுக்கு எளிவந்தகருணை மூர்த்தியாக இறங்கி வந்தான் என்று போற்றுகிறார்.

குலம் கொடுத்துக் கோள்நீக்கும் குணம் :

அடுத்துத் திருநள்ளாற்றுப் பதிகப்பாடல் ஒன்றைச் சிந்திக்கலாம். "குலம் கொடுத்துக் கோள்நீக்க வல்லான்" என்றுதொடங்குவது அப்பாடல். இதில், ஒவ்வொருஉயிருக்கும் அதனதன் தகுதிப்பாடுகளுக்கு ஏற்ப இறைவன் அவ்வக் குலத்தில் பிறக்கச் செய்து, அந்த வழியிலேயே உயிரின் தரத்தின் வளர்ச்சியில் அருளைவழங்குகின்றான் என்கிறார். எனவே ஜாதி, குலம் என்னும் பிரிவுகளை மறுப்பது கூடாது அவை இருக்கத்தான் செய்யும் தேவையும் கூட. அப்பிரிவுகள்மனிதனின் தகுதிவழியில் வந்தபிரிவுகள். ஆனால் அந்தப் பிரிவுகளில் வாழும் மனித உயிர்கள், சிறப்பாக வாழ்ந்து தரத்தை வளர்த்துக் கொள்ளும் பொழுது அந்த நிலையில், சாதி, குலம் வேறுபாடுகள் அகன்று போகும் என்பதுதான் சாத்தியமான உண்மையாகும். இக்கருத்திலேயே அப்பர் சுவாமிகள், "குலம் கொடுத்துக் கோள்நீக்க வல்லான் ..." என்கிறார். "குலம் கெடுத்து கோள்நீக்க வல்லான்" என்பது பிழையுள்ள பாடம். குலம் கெட்ட பிறகு குற்றம் இருக்க இடமில்லை, குற்றமில்லாத உயிரிடத்து எக்குற்றத்தை நீக்க வல்லான் என்று கேட்டால் அதற்குத் தக்க பதில் கிடைக்காது. எனவே அழுக்கை அழுக்கால் போக்குவது போல் குலமாகிய ஒரு குற்றத்தைக் கொடுத்துக் கோள் நீக்க வல்லான் என்பதே சரியான பாடமாகும்.

தயையே மூலதர்மம் :

இறைவன் எத்தகையவன் என்பதற்கு இப்பாடலில் விடை கிடைக்கிறது. அவன், 'தயாமூலதன்மம்' வழிநடப்பவன்என்கிறார். மூலதன்மம் - அதாவது மூலதர்மம் 'தயை' என்பதேஎன்றும் அதனையே தனக்குமூலதர்மமாகக்கொண்டிலங்குகிறான் என்றும் கூறுகிறார். இத்தகைய தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கு எல்லாம் நலம் கொடுக்கும் நம்பியாக அவன் விளங்குகிறான். தாழ்ந்தவர்களை உயர்த்துவதுதான் இறைவனின்வேலை. ஆனால் தாழ்ந்தோர்கள் என்பதற்குப் பொருள் என்ன? எனில், அறிவில், பொருளில், குலத்தில், கல்வியில் - ஏன்? இந்த மண்ணுக்குப் பிறவி எடுத்து வந்த அனைவருமே தாழ்ந்தோர்தான் என்பது பொருள். ஏன் எனில் இறைவனின் பார்வையில் எல்லோருமே தாழ்ந்தோர்கள் தாம். ஆதலின் அனைவருக்குமே நலம் கொடுக்கும் நம்பியாக விளங்குகிறான் நள்ளாற்றிறைவன் என்கிறார். தன்னை அடைந்து பணிந்து தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி எனப் பொருள் காண்பதும் உண்டு. எப்படியும் ஒருவன் நலிவுற்ற ஒருவனுக்கு உதவி செய்கிறான் என்றால் அதற்குத் தயை என்னும்

கருணை தான் காரணமாகிறது. இந்நிலை நல்ல மனிதனுக்கு ஏற்படக்காரணமே, கடவுள் அப்படி இருப்பதனுல்தான் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இறைவனின் தயையினுல்தான், "காரிட்ட ஆணவக்கருவறையில் கட்டுண்டு கண்ணிலாக் குழவி யைப்போல்" கிடந்த உயிகட்கு உடலைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளி, ஐந்தொழில்களையும் இடைவிடாது செய்து உயிர்களை நாளும் உயர்த்துகிருன், நலம் கொடுக்கிருன், அதனுல்தான் இறைவன் நம்பி என்றும் போற்றபடுகிருன். தாழ்ந்தோரை வாழ்விக்கும் அத்தகைய நம்பியைத் தொழுது நலம் பெறுவோமாக !

பொதுநிலை :

இவ் ஆரும் திருமுறையில் பொதுநிலையில் அடைவுத்திருத் தாண்டகம், திருவினுத்திருத்தாண்டகம், நின்ற திருத்தாண்டகம், மறுமாற்றத்திருத்தாண்டகம், தனித்திருத்தாண்டகம் என்ற பல தாண்டகங்கள் உள்ளன. 'க்ஷேத்திரக் கோவை' என்னும் தலைப் பிலும் பதிகம் உள்ளது. 'க்ஷேத்திரக் கோவை' என்னும் தாண்டக மும், அடைவுத்திருத்தாண்டகமும் தலங்களின் திருப்பெயர்களைத் தொகுத்து வழங்குவனவே எனினும் அடைவுத்திருத்தாண்டகம்-ஓர் இயைபுடன் அதாவது வாயில் என்னும் முடிவுடைய தலங்களை ஒரே இடத்தில் சேர்த்தும் கோயில் என்னும் முடிவுடைய தலங் களை ஒருவகையாகச் சேர்த்தும் - இங்ஙனம் பாடப் பெற்றுள்ளது. ஆனல் க்ஷேத்திரக்கோவை என்பது, அங்ஙனம் இன்றிப் பொது வாகத் திருத்தலங்களை இணைத்துப் பாடிய அமைப்புடையது. இவ்வாறு திருமுறையில் மொத்தம் 99 பதிகங்களும், 980 பாசுரங்களும் அடங்கியுள்ளன. "கொடுவினையார் என்றும் குறுகா அடி" என்றும், "திருவிழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்ருரே" என்றும், திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே என்றும் அருளிய தாண்டகத் தொடர்கள் என்றும் நல்லவர்கள்தான் இறைவனை வழிபடு கிருர்கள் என்பதை வலியுறுத்துகின்றன.

வாழ்த்து :

இவை போன்ற நற்சிந்தனைகளைச் சிந்திப்பதற்கு வாய்ப்பாக அமைந்த இத்திருமுறை வேள்வியில் பங்குகொண்ட அன்பர்களும் இருந்து கேட்ட இத்தலத்துப் பெருமக்களும், எல்லா நலன்களும் பெற்று நீடு வாழ, ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

திருமுறை வேள்வி சிறந்திடுக !
பெருமுறை வளமெலாம் பெற்றிடுக !

குருபாதம்

இன்ப துன்பங்கள் ஏன்? ஏற்றத் தாழ்வுகள் ஏன்?

கீழே படியுங்கள்!

எல்லோருக்கும் நல்ல முறையில் இன்பமாக வாழவே விருப்பம். ஆனால் அந்த எண்ணப்படி வாழமுடிகிறதா? இல்லை! ஏன்? எண்ணத்தில் பழுதா? - செயலில் குறைபாடா? அல்லது சூழ்நிலையில் இடையூறு? எவையும் இல்லை. எனினும் இன்பமாக எண்ணியபடி வாழ இயலவில்லை. ஏன்? ஏன்? இந்தக் கேள்வி இன்றுநேற்றல்ல! இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கேட்டு வருவது. இதற்கு என்ன விடை? நல்ல நிலத்தில் நல்ல விதையை விதைத்தால் நல்ல விளைவு கிடைக்கும்; சத்தற்ற நிலத்தில் சத்துக் குறைந்த விதையை விதைத்தால் விளைவு எதிர்பார்த்தபடி இருக்காது. இதை ஒத்துக் கொள்கின்றோம்; உணர்கின்றோம். இதைப்போன்றதே நம் அனுபவமும். இதை நாம் ஒத்துக் கொள்வதில்லை; உணர்வதில்லை. இதுபோன்ற பல சிக்கல்களைத் துல்லியமாகச் சிந்தித்து மேலும் விளக்கம் காண ஆசைப்படுகிறீர்களா? அதற்கு ஒரு வழி இருக்கிறது. நம் முன்னோர்கள் பலர் பெரிதும் சிந்தித்து நம் சமய நெறியில் நின்று எழுதி வைத்துள்ள தோத்திர சாத்திரங்களைப் படிக்க வேண்டும். இவற்றை எடுத்து நாமே வரிவரியாகப் படித்துப் பொருள் காண முடியாது. அதற்கு என்றே தருமை ஆதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பெருங்கருணையோடு சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரி என்ற பெயரால் பல்வேறு இடங்களில் கல்லூரிகளை நிறுவியருளியுள்ளார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப் பெற்ற இத்தகைய கல்லூரிகளில், பயின்று வருவோர் பலரும் "எங்கள் மனத்தில் தோன்றிய சிக்கல்கள் பலவும் இக்கல்லூரிகளில், சேர்ந்து பயின்று வருவதால் எளிதாகத் தீர்க்கப் பெற்றன. இது உண்மை" என்று கூறி மகிழ்கின்றனர். இம்மகிழ்ச்சியை நீங்களும் பெற வேண்டாவா? வேண்டும் எனில் உங்கள் ஊருக்கு அருகியில் உள்ள மாலைநேரக் கல்லூரி மையத்தை அணுகுங்கள், உங்கள் வசதிக்காக அம்மையங்களின் இருப்பிடங்களைக் கீழே தந்துள்ளோம்.

வாருங்கள்! வாட்டம் தீருங்கள்!

1. சென்னை — தருமை ஆதீனம்
சமயப் பிரசார நிலையம்,
158, உஸ்மான் சாலை,
தியாகராயநகர்,
சென்னை 600 017

2. சிதம்பரம் — தருமை ஆதீனம்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம்,
கனகசபை நகர்,
சிதம்பரம்.

3. மயிலாடுதுறை — ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன்
மெட்ரிகுலேஷன் பள்ளி,
57, மகாதானத் தெரு,
மயிலாடுதுறை 609 001.

4. திருச்சிராப்பள்ளி — தருமை ஆதீனம் ஸ்ரீ மௌனமடம்,
மலைக்கோட்டை,
திருச்சிராப்பள்ளி 620 002.

5. மதுரை — தருமை ஆதீனம்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம்,
397, வடக்கு மாசி வீதி,
மதுரை 625 001.

6. திருநெல்வேலி — சைவசபை,
48, தெற்கு பஜார்,
பாளையங்கோட்டை 627 002.

7. ஸ்ரீவைகுண்டம் — கலைக்கோயில் கட்டிடம்,
ஸ்ரீவைகுண்டம்.

உ

சிவமயம்

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மீது குருபூஜை விழாவின் பொருட்டுப் பாடிய

கவி

10—5—1990

பெருமைநிறை தருமைதனில் செங்கோல் ஓச்சும்
பீடுடைய பெருங்குருவே ஞான மூர்த்தி
பெருகியஅன் பினுல்பூசை நாளும் செய்யும்
பெற்றிகண்டு அடியவர்கள் போற்று கின்றுர்
கருணைமிகு கவின்முகமும் கடைக்கண் நோக்கும்
கண்டிகையும் திருநீற்று ஒளியின் கீற்றும்
கருத்துரைக்கும் சித்தாந்த நூலின் நுட்பம்
கற்றேரும் சொற்கேட்டு வியந்தே நின்றுர். (1)

திருமுறையாம் மூவரின்பா அமுதம் உண்டு
தித்திக்கப் பதிகமதை வழங்கச் செய்தீர்
திருவாளர் பலரையுமே படிக்கச் செய்து
திதகல நலம்பெறவே உள்ளம் கொண்டீர்
அருந்தமிழின் கலைவல்லீர் அன்பு மிக்கீர்
ஆதிகுரு தவமுனிவர் அந்நாள் தன்னில்
அருள்பெறவே சண்முகர்தாள் பணிந்து நின்றேன்
அன்புமுரு கையன்எனக் கருள் தாரீரோ? (2)

கவியாக்கம் :-

முத்துக்குமரன் அருள்புலவர், மு. முருகைய தேசிகர்.
வைத்தீசுவரன்கோயில்.

நோஸ்ட்ராடமஸ் தீர்க்க தரிசனங்கள்

திரு. ஏ. சுந்தரராஜன்.

கென்னடி, ஹிட்லர், நெப்போலியன் போன்ற சரித்திர நாயகர்கள் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அவர்களுடைய சாதனைகளைத் திட்டவட்டமாகத் தன் அகக் காட்சியில் பார்த்து வெளியிட்டவர் 16 - ம் நூற்றாண்டின் தீர்க்கதரிசி நோஸ்ட்ராடமஸ்.

உலக சரித்திரத்தில் மூன்று மனிதர்கள் - நெப்போலியன், ஹிட்லர், மாபஸ் (MABUS) ஏகசக்ரவர்த்தியாக முயற்சி செய்வர்; அவருள் மாபஸ் மட்டுமே 1999-ல் உலக அரசை (INTER NATIONAL GOVERNMENT) அமைத்து ஆளுவார் என்றும், ஒரே உலக அரசியலமைப்பு ஏற்பட்டால், நீண்டநாள் பிரச்சினைகளாக உலகெங்கும் பரவியுள்ள ஜனத்தொகைப் பெருக்கம், சுற்றுப்புறச் சூழ்நிலைச் சீர்கேடு, உணவுப்பற்றுக்குறை, எரிபொருள் பற்றுக்குறை, உலக அணு ஆயுதப் போர் அபாயம் மற்றும் எய்ட்ஸ், போதை மருந்து நோய்கள் ஆகியவை நிரந்தரமாகத் தீர்க்கப்படும் என்றும் 450 ஆண்டுகளுக்கு முன்னரேயே "நூற்றாண்டுகள்" (CENTURIES) என்ற தலைப்பில் நோஸ்ட்ராடமஸ் எழுதி வெளியிட்டுள்ளார்.

நோட்ராடமஸின் ஏறக்குறைய ஓராயிரம் தீர்க்க தரிசனங்கள் மேலை நாட்டு அறிஞர்களால் பரிசீலிக்கப்பட்டு ஆய்வுநூல்கள் சுமார் முந்நூறுக்கும் மேற்பட்டவை வெளியிடப்பட்டுள்ளன. "வார்னர் பிரதர்ஸ்" என்னும் ஹாலிவுட் திரைப்பட நிறுவனம் "தீர்க்கதரிசனம் பெற்ற மனிதன்" என்னும் டாகுமெண்டரி படத்தை வெளியிட்டுள்ளது.

மைக்கேல் நோஸ்ட்ராடமஸ் பிரஞ்சு நாட்டில் செயின்ட் ரெமி என்னும் சிற்றூரில் 1503-ல் பிறந்தார். யூதகுடும்பத்தினரான அவருடைய பெற்றோர்கள் கிருஸ்தவ மதத்தைத் தழுவினர். நோஸ்ட்ராடமஸ் மறைநூல்களும் மருத்துவமும் கற்றார். மான்ட் பெல்லி பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்று, 1534-ல் திருமணமும் செய்துகொண்டு தன் வாழ்க்கையை இனிது தொடங்கினார். ஆனால் சில ஆண்டுகளுக்குப் பின்னர் தெற்கு பிரஞ்சில் பரவிய பிளேக் கொள்ளை நோயில் தன் மனைவியை இழந்தார்.

இதனால் நோஸ்ட்ராடமஸ் தனிமையில் ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் மௌனமாகவே உலகத் தொடர்புகள் ஏதுமின்றிக் கழித்தார். நோஸ்ட்ராடமஸின் முகத்தில் ஒளி ஏற்பட்டதாம். யாரை உற்று நோக்கினாலும் அவருடைய எதிர்கால நிகழ்ச்சிகள் அவருடைய அகக்காட்சியில் தோன்றினவாம். வருங்காலக் காட்சிகளை விவரித்து அவர் ஒரு நூல் வெளியிட்டார். அது அக்காலத்து பிரஞ்சு நாட்டின் அரசியல் மாற்றங்களை விவரித்தது. பிரஞ்சு மன்னன் இரண்டாம் ஹென்றி ஒரு விளையாட்டு விபத்தில் இறக்க நேரிடுவதைக் குறிப்பிட்டு நான்கு வரிப் பாடல் ஒன்று வெளியிட்டிருந்தார். அந்த நிகழ்ச்சி நடைபெற்ற பொழுது, மக்கள் நோஸ்ட்ராமஸ் தீர்க்கதரிசனங்களில் ஆர்வம் காட்டினர்.

ஒரு நாள் நோஸ்ட்ராடமஸை ப்ளோரன்ஸ் டி விலி என்னும் பணக்காரர் விருந்திற்கு அழைத்திருந்தார். அன்று மாலை அவருடைய தோட்டத்தில் இருவரும் உலாவிக்கொண்டிருந்த பொழுது, இரண்டு பன்றிக்குட்டிகள் விளையாடிக் கொண்டிருப்பதைக் காட்டி, " நோஸ்ட்ராடமஸ், இந்தப் பன்றிக் குட்டிகளின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று உங்களால் குறிப்பிட முடியுமா? " என்று ப்ளோரன்ஸ் டி விலி கேட்டார். உடனே " வெள்ளைப் பன்றியை ஒரு நரி தின்றுவிடும் கறுப்புக் குட்டியை நாம் தின்னப்போகிறோம் " என்றாராம்.

உடனே அந்த பெருஞ் செல்வர் இரகசியமாகத் தன் ஏவலர்களை அனுப்பி வெள்ளைப் பன்றியைக் கொன்று, இரவு உணவாகச் சமைக்கச்செய்தாராம்.

அன்றிரவு நோஸ்ட்ராடமஸ் விருந்தில் கறியைச் சுவைத்துக் கொண்டிருக்கும்பொழுது அச்செல்வந்தர், " நோஸ்ட்ராடமஸ், நாம் சாப்பிட்டுக் கொண்டிருப்பது கறுப்புப் பன்றியின் இறைச்சியா? அல்லது வெள்ளையா? " என்று கேட்டாராம். " நான் முதலில் சொன்னதை மறுத்துச் சொல்வது கிடையாதே. உங்கள் சமையல்காரரைக் கூப்பிட்டுக் கேளும் கறுப்பா, வெள்ளையா " என்றார்.

உடனடியாக சமையற்காரர் அழைக்கப்பட்டார். " என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் சொல்லியபடியே வெள்ளைப் பன்றியை வெட்டிச் சமைத்தேன். மேஜைமேல் வைத்துவிட்டு, தோட்டத்துக்குப்போய் பழம் பறித்துச் சாப்பிடப் போனேன். அதற்குள் உங்கள் பிள்ளைகள் வேட்டையின்பொழுது பிடித்துக் கொண்டு வந்த நரிக்குட்டி, எப்படியோ மோப்பம் பிடித்துக்

கொண்டுவந்து மேஜைமேல் மூடிவைத்த பணியாரங்களை உருட்டிக்கொட்டி, சாப்பிட்டுவிட்டது. அதனால் நீங்கள் கோபப்படப் போகிறீர்களே என்று நினைத்து உடனடியாகக் கறுப்புப்பன்றியைக் கொன்று, கறி சமைத்து வைத்துவிட்டேன் '' என்றான்.

1550-ல் "பஞ்சாங்கம்" என்ற தலைப்பில் அந்த ஆண்டின் முக்கிய சம்பவங்களை நோஸ்ட்ராடமஸ் எழுதி வெளியிட்டார். அதன் பின்னர் தொடர்ந்து சில ஆண்டுகள் அவ்வாறே தன் வருங்கால தீர்க்கதரிசனங்களை '' சகுனங்கள் '' என்று பெயரிட்டு வெளியிட்டு வந்தார்.

1555-ல் உலகம் முடியும் வரையிலான - கலியுகாந்திரம் வரையிலான - எல்லா சரித்திரச் சம்பவங்களையும் தொகுத்து எழுதிப் பத்து பாகங்களாக வெளிட்டார்.

16-ம் நூற்றாண்டில் விமானங்கள் தோன்றாத காலத்தில், விமானப் போக்குவரத்து (AIR TRAVEL) சந்திர மண்டலத்துக்கு மனிதன் சென்று திரும்புதல், அங்கிருந்து கொண்டுவரும் கல்லிலிருந்து நிலாத்தங்கம் (MOON GOLD) வரப்போவது ஆகிய மற்றையும் துல்லியமாகச்சொன்னவர் நோஸ்ட்ராடமஸ்ஒருவரே.

கி பி 1566-ல் நோஸ்ட்ராடமஸ்ஸின் மறைவுக்குப் பின்னரே அவருடைய நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியாகி ஐரோப்பா முழுவதும் பிரபலமாகி உள்ளது. தன் தாய் நாடாகிய பிரஞ்சு நாட்டில் மன்னர்கள் ஆட்சி அழிக்கப்பட்டு, புரட்சிக்குப் பின்னர் மக்கள் ஆட்சி எப்படி ஏற்படப்போகிறது என்பதை நோஸ்ட்ராடமஸ் எழுதி உள்ளார். நோஸ்ட்ராடமஸ்ஸின் மறைவுக்கு 200 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரஞ்சுப் புரட்சி ஏற்பட்டு, புதிய அரசு உருவெடுத்தது. நோஸ்ட்ராடமஸ்ஸின் புகழை உயர்த்தியது.

பிரஞ்சுப் புரட்சியில் அரசன் 14-ம் லூயியும் அரசி மேரி அன்டோனிட்டியும் பாரிஸ் அரண்மனையின் பின்புற வாயில் வழியாக வெளியேறி, திரையிட்ட குதிரை வண்டியில் காட்டுப் பாதைகளைக் கடந்து. '' வாரென்னஸ் '' என்னும் ஒரு சிற்றூரை அடைவர். அங்கே பௌர்ணமி நிலாவொளியில் புரட்சியாளர்களிடம் பிடிபடுவர் — என்று நோஸ்ட்ராடமஸ் குறிப்பிட்டு இருப்பதைப் பல ஆராய்ச்சியாளர்கள் பாராட்டி உள்ளனர். ஏனெனில் "வாரென்னஸ் '' பிரஞ்சு சுதந்திரத்தில் ஒரே ஒருமுறைமட்டுமே, பத்திரிகைகளிலும்கூட, பேசப்பட்ட குக்கிராமமாம். அதை 200 ஆண்டுகளுக்கு முன்னரே தெளிவுபடுத்தியிருப்பது நோஸ்ட்ராடமஸ்ஸின் சிறப்பு.

நெப்போலியனின் (NEPOLLOUN) என்று நோஸ்ட்ராடமஸ் குறிப்பிட்டுள்ளார். திடீர் எழுச்சியையும் பல்வேறு படையெடுப்புகளையும் ரஷியப் போரில் குளிரால் தோல்வியுற்றுத் திரும்புதலையும் விவரித்துள்ளார் நோஸ்ட்ராடமஸ். நெப்போலியனின் தலையணி (தேனீ கூடு போன்ற தொப்பி) யைக் கூட நோஸ்ட்ராடமஸ் குறிப்பிட்டுள்ளார். முதன் முறையாக உலக அரசை அமைக்க முயன்றவன் நெப்போலியன் என்றும் குறித்துள்ளார். "ANTI-CHRIST" என்னும் தொடரில் மனித நேயமற்றவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நெப்போலியனுடைய நூறு நாட்கள் அரசாட்சி உள்பட முடிவுவரை எல்லா நிகழ்ச்சிகளையும் சொல்லிருப்பது ஓர் உலக விந்தை.

ஜெர்மனியில் ஏழைக் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறக்கும். அக்குழந்தை தன் இரண்டாவது வயது முதல் என்ன பேசினாலும் எல்லாரும் கைதட்டிக் கொண்டாடுவார்கள். தன்பேச்சாற்றலால் உலகைக் கவர்ந்திழுக்கும். அக்குழந்தைதான் இரண்டாவது ANTI-CHRIST, உலக அரசை அமைக்க ராணுவ முறைகளைக் கையாளும் ஹிட்லர். ஹிட்லரின் பெயரைத் தன் நூலில் நோஸ்ட்ராடமஸ் ஹிஸ்லர் (HISTLER) என்று எழுதி இருப்பதை அறிஞர்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். 400 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட அவருடைய நூலின் பல்வேறு பதிப்புகளில் நேர்ந்திருக்கக்கூடிய அச்சுப்பிழையாகக் கூட அது இருக்கலாம்.

ஹிட்லரின் பிரச்சார மந்திரி டாக்டர் கோயபல்ஸின் மனைவி 1939-ம் ஆண்டு நோஸ்ட்ராடமஸ்ஸின் நூலைப் படித்து அந்நூலில் ஹிட்லரின் சாகசங்கள் விவரிக்கப்பட்டுள்ளதை ஹிட்லரிடம் காண்பித்தாள். ஹிட்லர் தன்வெற்றிகளை விவரிக்கும் பாடல்களை மட்டும் அச்சிட்டு லட்சக்கணக்கான பிரதிகளை விமானத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளில் தூவிவிட்டார்.

இச்செய்தி இங்கிலாந்தில் பரவியதும் அப்பொழுது பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் பெரும் செலவு செய்து ஒரு சோதிட நிபுணரை அழைத்து நோஸ்ட்ராடமஸ்ஸின் வருங்கால விளக்கங்களின் உண்மைத் தன்மையைப் பற்றிய விவரங்களை ஆராய்ந்தார். அக்கணிப்புகளில் ஹிட்லரின் வீழ்ச்சியையும் நோஸ்ட்ராடமஸ் குறிப்பிட்டுள்ளதை சர்ச்சில் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டி, துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு தன்தேச மக்களின் நம்பிக்கையை மீட்டார்.

அமெரிக்காவின் விடுதலைப்போரைப்பற்றி நோஸ்ட்ராடமஸ் குறிப்பிட்டிருந்தது பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் அந்த நாடுநோஸ்ட்ராடமஸ்காலத்தில் உருவாகவில்லை. அமெரிக்க ஜனாதிபதிகள் ஆபிரகாம் லிங்கன், கென்னடி ஆகியோர் சுட்டுக் கொலை செய்யப்படுவர் என்பதையும் தன் நூலில் நோஸ்ட்ராடமஸ் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவின் செல்வச்செழிப்பை முன்னரே உணர்த்திய நோஸ்ட்ராடமஸ் அவர்களுடைய பெரிய சந்தேகமான "கறுப்பர் ஜனாதிபதி யாராவது வரக்கூடுமா?" என்பதற்கு இல்லை என்றும் ஒருபெண் ஜனாதிபதி வருவார் என்றும் உணர்த்தியுள்ளார்.

ஸான்பிரான்ஸிஸ்கோவின் நிலச்சரிவு, நியுயார்க் நகர அழிவு (1994 செப்டம்பர்) ஆகியவற்றையும் நோஸ்ட்ராடமஸ் குறிப்பிட்டுள்ளார்.

சரித்திரத்தின் திருப்புமுனைகள் எனப்படும் ஆச்சரியமான நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுதெல்லாம் "நோஸ்ட்ராடமஸ்ஸின் வருங்காலக் கணிப்பு" களில் அவை ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருப்பதைப் பலர் பாராட்டியுள்ளனர்.

பிரஞ்சுப் புரட்சி 1789-ல் மன்னர் ஆட்சியை வேரோடு களைந்தெறிந்தபொழுதும், ரஷிய, அமெரிக்கப் புரட்சிகள் ஏற்பட்டபொழுதும் நோஸ்ட்ராடமஸ்ஸின் நூல் ஐரோப்பியர்களால் பைபிளுக்கு அடுத்த வேதநூலாகக் கருதப்பட்டு எல்லோராலும் வாசிக்கப்பட்டது.

வாடிகனில் 1978-ல் போப்பாண்டவரின் கொலையை 450 ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டார் நோஸ்ட்ராடமஸ். எந்த மதமுமே இல்லாத புதிய சமுதாய மறுமலர்ச்சிப் போக்கு உலக அரசால் அமைக்கப்படும் என்பதும் நோஸ்ட்ராடமஸின் திட்டவட்டமான வெளியீடு. 1973-லிருந்து 2000 வரை பல்வேறு கிளர்ச்சிகளும் சிறுசிறு யுத்தங்களும் (இலங்கைத் தமிழர் பிரச்சனை உள்பட) மூளும் என்பது நோஸ்ட்ராடமஸின் வரையறை.

நோஸ்ட்ராடமஸ்ஸின் பத்து தொகுதிகள் அடங்கிய "நூற்றண்டுகள்" (The Centuries) நூலின் உள்ளுறைகள் வருமாறு :—

முதல் தொகுதி :

பிரஞ்சுப் புரட்சியில் 1789-ல் புதிய அரசு அமைதல்; நெப்போலியன் தோற்றம்; ஆட்சியில் அமர்தல்; பிராட்டஸ்டண்ட் போராட்டம். 1601-ம் ஆண்டில் பிரஞ்சுத் திருப்புகள் இத்தாலிய

நகரத்தைக் கைப்பற்றுதல், நான்காவது ஹென்றி அரசப் பதவியைப்பெறுதல், காதரின் அரசியின் குழந்தைகள், இரண்டாவது ஹென்றி ஆகியோருக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டம். இரண்டாவது உலகப்போர், கென்னடி கொலை, 1889-ல் லூயின் பாலைக்காய்ச்சிப் பக்குவப் படுத்தும் நிலையத்தின் தொடக்கம், 1814-ல் இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஸ்பெயினின் மன்னர் ஆட்சியின் வீழ்ச்சி, ஸெயிண்ட் ஹெலனாவில் நெப்போலியன் 1815-ல் வாட்டர்லூ போர், 1793-ல் பதினான்காவது லூயிக்கு மரண தண்டனை நிறைவேற்றுதல், அயதுல்லா கொமேனியினால் மன்னர் ஷா நாட்டைவிட்டு வெளியேற்றப்படுதல், முதலாவது நெப்போலியன் ட்ராகுலார் யுத்தம். 1589-ம் ஆண்டில் பிராங்கோ, ரஷியா போர், ஸ்காட்ஸ் ராணிமேரி விமானத்தில் பறத்தல், அமெரிக்கா - வியட்நாம் போர், மூன்றாவது ஹென்றி கொலை செய்யப்படுதல்' 1799-ம் ஆண்டில் நெப்போலியன் எகிப்தியப் போருக்குப் புறப்படுதல் எல்லாம் கூறப்பட்டு இருக்கின்றன.

இரண்டாவது தொகுதி :

நாஸ்டர்டாம், நாடோ கப்பல்கள் பிரிட்டிஷ் எல்லையிலிருந்து 1981-ல் வெளியேறுதல். 1870-ம் ஆண்டில் ஹிட்லரின் எழுச்சியும், வீழ்ச்சியும், மெட்ஸ் ஒப்பந்தம். 1970-ல் ரஷியா-நேச நாடுகள் கூட்டு, முதலாம் நெப்போலியன், மூன்றாவது நெப்போலியன், ஜான் எப். கென்னடி, இரண்டாவது ஜேம்ஸ், மூன்றாவது வில்லியம் கொலைகள். இங்கும் எந்தச் சம்பவமும் வரிசைப்படி இல்லை. அதுமாத்திரமல்ல, பலமுறை ஒரேவிதச் செய்திகள் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருக்கின்றன.

மூன்றாவது தொகுதி :

1936 - ல் ஸ்பானிஷ் உள்நாட்டுப் போரும் கொலைகளும். 1936 - ல் நான்காவது ஹென்றி கொலை, பதினெட்டாவது லூயி, இரண்டாவது உலகப் போர், முஸோலினி, ஹிட்லர், ஒயர்லஸ் செய்திப் போக்குவரத்து, மின்சாரம், ஈரான் ஷா, பிராங்கோ முஸோலினி போர், முதலாம் ஜான் பவுல், முதலாம் சார்லஸ், ஜெனரல் டிகாலே மற்றும் பலர் பற்றிய விவரங்களும் இருக்கின்றன.

நான்காவது தொகுதி :

ஸ்பானியாவில் அரசப் பதவிப் போர், பெர்லினில் ஹிட்லர் மாறுதல், மூன்றாவது நெப்போலியன், ஹிட்லர், முஸோலினி. டேரியா முதலியன உள்ளன.

ஐந்தாம் தொகுதி :

1987 - ல் உலகப்போர், ஈரான் ஷா, பெர்லின் சுவர், அமெரிக்கா, ரஷியாவுடன் ஷாவின் தொடர்பு முதலியன கூறப்பட்டிருக்கின்றன.

ஆறுவது தொகுதி :

ஹிட்லர், முஸோலினி, பதினாறுவது லூயி மரணம், இரண்டாம் பிலிப் முதலியவை குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஏழாவது தொகுதி :

1889 - ல் தேசிய சட்டசபை, 1658-ல் பாரிஸில் ரேவாயர், 1940 - ல் பிரான்ஸ், இளவரசர் பர்டினாண்ட் மரணம் முதலியன சொல்லப்பட்டிருக்கின்றன.

எட்டாவது தொகுதி :

மீண்டும் கென்னடி சகோதரர்கள், நாஜிக்களின் ஆளுகையில் ஜெர்மனி, பணப்புழக்கம் அதிகரிப்பு, காகிதப் பணம், முஸோலினி, 1940 - ல் மார்ஷல் பெட்டைன், ஆலிவர் கிராம்வெல், பதினைந்தாவது லூயி, ரஷ்யப் புரட்சி, போப்களின் அகால மரணங்கள் முதலியன கூறப்பட்டிருக்கின்றன.

ஒன்பதாம் தொகுதி :

1848 - ம் ஆண்டில் சட்டசபை, பதினைந்தாவது லூயி, அதுல்லா கொமெனியின் வீழ்ச்சி, நியூயார்க்கின் எதிர்காலம், மாஸ்கோவில் இருந்து நெப்போலியன் பின்வாங்குதல், 1941-ல் பேரல் துறைமுகம் தாக்கப்படுதல் முதலியன கூறப்பட்டிருக்கின்றன.

பத்தாம் தொகுதி :

பதினெட்டாவது லூயி பற்றி விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. ராபர்ட்கென்னடியின் மரணம். 1999-ல் யுத்தம், நிக்ஸனின் எழுச்சியும், வீழ்ச்சியும், ஸ்பெயினின் இரண்டாவதுபிலிப், பிரஞ்சு நாட்டின் மூன்றுவது குடியரசு உதயமாதல் போன்றவை கூறப்படுகின்றன. மேலும் இரண்டு தொகுதி நூல்கள் நோஸ்ட்ராடமஸ்ஸால் குறிப்பிடப்படுகின்றன. அவை மதவெறியர்களால் தீக்கிரையாக்கப்பட்டன என்று கருதப்படுகிறது.

— நன்றி, தினமணி கதிர், 20—5—90.
(தினமணி இணைப்பு)

விழுமப் சார் கல்வியில் சமயத்தைப் — பயிற்றுவித்தலின் அவசியம்*

டாக்டர் திரு. ச. முத்துக்குமரன்,
எம். எஸ்சி., பிஎச். டி.,
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

அரசால் பல்வேறு காலகட்டங்களில் அவ்வப்போது நிறுவப் பெற்ற பல்வேறு கல்விக் குழுக்கள், சமயக்கல்வி குறித்தும் ஒழுக்கக் கல்வி குறித்தும் தெரிவித்த கருத்துகள் பின்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துத் தரப்படுகின்றன.

இந்தியப்பல்கலைக்கழகக்குழுவானது (1948-49) "ஒழுக்கத்தை மிகவும் இன்றியமையாததாகக் கருதாதவரையிலும் நன்மை விளையாது. நமது கல்வி நிறுவனங்களில் ஆன்மீகப் பயிற்சியைப் புறக்கணித்தோமேயானால், நமது வளர்ச்சியின் வரலாற்றை நாம் மறந்து செயல்படுவதாகும்" என்று கூறியது.

உயர்நிலைப்பள்ளிக் கல்விக்குழு (1952-53) இப்பிரச்சினையை 'நற்பண்புக் கல்வி' என்ற தலைப்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறது: "சமயக்கல்வியும், ஒழுக்கக்கல்வியும் நற்பண்பை உருவாக்க முக்கிய பங்கை வகிப்பவை... நம் நாடு மதச்சார் பற்ற நாடு. அதற்கேற்ப உருவாக்கப்பட்ட நமதுநாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, ஒருவர் சமயக் கல்வியை விரும்பினால்தான் அவருக்கு கற்பிக்கலாம். அக்கல்வியையும் வகுப்பு நேரத்திற்கு அப்பால்தான் அளிக்கலாம். மேலும், அத்தகைய கல்வியைக் குறிப்பிட்ட சமயத்தைப் பின்பற்றும் குழந்தைகளுக்கு மட்டுமே தர இயலும்; அதற்கும் பெற்றோர்களின் அனுமதியும் தேவை; குறிப்பிட்ட நிறுவனத்தினரின் அனுமதியும் தேவை."

"சமயக்கல்வியும், ஒழுக்கக்கல்வியும் கற்பித்தல்" தொடர்பான பிரகாசக்குழு (1959) தெரிவித்தகருத்துக்கள் பின்வருமாறு:

---

* திருத்தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டி நடைபெற்ற திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் 15—5—90 அன்று ஆற்றிய உரை.

"இன்று நமது கல்வியுலகமும் சமுதாயமும் பல்வேறு இடையூறுகளாலும், சீர்குலைவுகளாலும் அமைதியின்மைக்கு ஆளாக அடிப்படைக் காரணம் சமயக் கோட்பாடுகள், நம் மக்களின் மனத்திலிருந்து மெல்ல மெல்ல அகன்று வருவதேயாகும். இளமைக் காலத்திலிருந்தே ஆன்மீகக் கல்வியும் ஒழுக்கக்கல்வியும் முறையாகப் பயிற்றுவிப்பதே இதற்கான தீர்வு என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது."

கோத்தாரிக் குழுவும் (1964-85) சமூக, ஒழுக்க, ஆன்மீக நெறிகளை அறிவுறுத்த வேண்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. அது மேலும் கூறுவதாவது, "பயிற்றுவிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட ஒழுக்கநெறிகள் பெரும் சமயநெறிகளைச் சார்ந்து இருக்கவேண்டும். உயர்நிலைக் கல்வியின் கடைசி இரண்டு ஆண்டு பாடத்திட்டத்தில் பெரும் சமயங்களின் உயிர்நாடியான நெறிமுறைகள் இடம்பெறவேண்டும்."

இவ்வாறு ஒவ்வொரு கல்விக்குழுவினரும் சமூக, ஒழுக்க, ஆன்மீக நெறிகளைக் கற்பித்தலின் தேவையை வற்புறுத்தினர். எனினும் நடைமுறையில் இது செயற்படுத்தப்படவில்லை. சொல்லப்போனால், இந்தியா சுதந்திரம் பெற்றபின் இந்த நாற்பத்திரண்டாண்டுக் காலத்தில், அடிப்படை சமயக்கொள்கைகளை, அதிலும் குறிப்பாக இந்தியாவிலுள்ள பெரும்பான்மையோரின் சமயக் கோட்பாடுகளை நமது இளந் தலைமுறையினரது உள்ளத்திலிருந்து மெல்லமெல்ல அழிக்கும் அல்லது கற்பிப்பதற்கு எதிரான முயற்சிதான் நடைபெற்றது என்றே கூறவேண்டும். இந்நிலைக்குக் காரணங்களாகப் பலராலும் சுட்டப்படுவது, நமது அரசியல் சட்டத்திலுள்ள 28, 30ஆவது பிரிவுகளே. இப்பிரிவுகள் பின்வருமாறு:

28. (1) அரசு நிதியங்களிலிருந்து முழுவதுமாகப் பேணிவரப்படும் கல்வி நிறுவனம் எதிலும், சமயக் கல்வி எதற்கும் வகை செய்யப்படுதல் ஆகாது.

(2) ஒரு கல்வி நிறுவனம், அரசினால் செயலாட்சி செய்யப்பட்டு, ஆனால் அதில் சமயக் கல்வி வழங்கப்படவேண்டும் என வேண்டுறுத்துகிற நிலைக்கட்டளை (endowment) அல்லதுபொறுப்புக் கட்டளை (trust) எதன்கீழும் அது நிறுவப்பட்டிருக்கிறது எனின், (1) ஆம் கூறிலுள்ள எதுவும் அத்தகைய நிறுவனத்திற்குப் பொருந்துதல் ஆகாது.

(3) அரசினுல் இசைவேற்பளிக்கப்பட்டிருக்கிற அல்லது அரசு நிதியங்களிலிருந்து உதவி பெறுகிற கல்விநிறுவனம் எதிலும் பயில வருகைதரும் எவர் ஒருவரும், அத்தகைய நிறுவனத்தில் வழங்கப் படலாகும் சமயக்கல்வி எதிலும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்றே, அத்தகைய நிறுவனத்தில் அல்லது அதனுடன் சேர்ந்த வளாகம் எதிலும் நடத்தப்படலாகும் சமய வழிபாடு எதற்கும் வருகைதர வேண்டும் என்றே, அவர் அல்லது அவர் உரிமை வயதடையாதவராக (minor) இருக்கிருர் என்றல், அவருடைய காப்பாளர் (guardian) அதற்குத் தம் இசைவை அளித்திருக்கிருர் என்றலன்றி, வேண்டுறுத்தப்படுதல் ஆகாது.

30. (1) சமய அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ சிறுபான்மையினராக உள்ள அனைவரும் தங்கள் விருப்புத்தேர்வின்படி (choice) கல்விநிறுவனங்களை நிறுவவும் செயலாட்சிசெய்யவும் உரிமை உடையவர் ஆவர்.

((1அ) ஒரு சிறுபான்மையினரால் நிறுவப்பட்டுச்செயலாட்சி செய்யப்பட்டுவரும் (1)ஆம் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கல்வி நிறுவனத்தின்சொத்து எதனையும் கட்டாயமாகக் கையகப்படுத்து வதற்கு வகைசெய்கிற சட்டம் எதனையும் செய்வதில், அத்தகைய சொத்தினைக் கையகப்படுத்துவதற்காக அத்தகைய சட்டத்தின் கீழ் நிலையுறுத்தப்படும் அல்லது தீர்மானிக்கப்படும் தொகை, அந்தக் கூறின்கீழ் பொறுப்புறுதியளிக்கப்பட்ட உரிமையினை வரையறைப்படுத்தலோ, அழித்தறவோ செய்யாது இருக்குமாறு அரசு உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும்.)

(2) கல்வி நிறுவனங்களுக்கு உதவி வழங்குகையில், சமய அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ சிறுபான்மை யினராக உள்ளவர்களின் மேலாண்மையில் இருக்கிறதென்னும் காரணங்காட்டி கல்வி நிறுவனம் எதற்கும் எதிராக, அரசு வேற்றுமை பாராட்டல் ஆகாது.

நடைமுறையில்பார்த்தால், சமயக்கல்வி சிறுபான்மையினரது நிறுவனங்களில்மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறது. பெரும்பான்மை யினருக்கு அவர்தம் சமயக்கல்வி பயிற்றுவிக்கப்படுவதில்லை.

அரசிடமிருந்து ஒரு குறிப்பிட்ட அளவிலோ, முழு அளவிலோ நிதியுதவி பெற்று இயங்கும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் பெரும்பான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞருக்கு, அவருடைய சமயக்கல்வியைப் பெறும் உரிமை இருக்கிறதா இல்லையா என்பதே இங்கு எழும் கேள்வியாகும்.

இந்த இடத்தில் சமயக்கல்வியைப் பற்றி அண்ணல் காந்தி அடிகள் கூறிய கருத்துக்கள் நினைவு கூரத்தக்கன. "சமயக்கல்விப் பாடத்திட்டத்தில் ஒருவனுக்கு அவனது சமயக்கல்வி மட்டுமன்றி, பிற சமயக்கோட்பாட்டுக் கல்வியும் கற்பிக்கப்படவேண்டும். மற்றும் கருத்துக்களை மதித்துப் போற்றும் பரந்துபட்ட சமரச மனோபாவத்தை உருவாக்கி அதன்மூலம் உலகிலுள்ள பல்வேறு சமயத் தத்துவங்களை அறிந்துகொள்ளவும் அவற்றைப் போற்றும் பண்பைப் பெறவும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும்."

மகாத்மா காந்தி இவ்வாறு எழுதிய காலச்சூழல் இன்றைய காலச்சூழலில் இருந்து வேறுபட்டது. இப்பின்னணியில் வாழ்ந்த ஒரு படித்த சராசரி இந்தியனுக்குத் தன் சமயத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்கும் வாய்ப்பு இருந்தது. அவன் தன் தாய்மொழியில் அல்லது வடமொழியில் அல்லது ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற தன் சமயத்தைச் சார்ந்த நூல்களுள் முக்கியமானவற்றைத் தன் வீட்டிலேயே கற்றறியும் வாய்ப்பைப் பெற்றிருந்தான். இப் பின்னணியில், அவன் பிற சமயத் தத்துவங்களையும் கற்க வேண்டுமெனப் பரிந்துரை செய்வது தேவையாயிற்று. ஆனால், இன்றோ, பள்ளியில் அல்லது கல்லூரியில் படிக்கும் சராசரிமாணவன், தனது சமய நூல்களைக் கற்கும் வாய்ப்பு இல்லாத குடும்பச் சூழலைச் சார்ந்தவன். கல்லூரியிலோ, தொலைக்காட்சியிலோ நடக்கும் வினாடி வினாப் போட்டியில் பங்குபெறும் குழுவினர் அனைவராலும் பதிலளிக்கப்படாமல் விடுபடும் வினாக்களைப் பார்த்தால் அது அநேகமாக நமது நாட்டின் அல்லது அந்த மாணவனது மாநிலத்திலுள்ள புராணங்கள் அல்லது சமய நூல்களைப் பற்றிய எளிய வினாக்களாகவே இருக்கும்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்பதைக் கல்வியாளர் அனைவருமே ஒப்புக்கொள்வர் என்பதில் ஐயமில்லை. பெரும்பான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தோருக்கு அவர்களது சமய நூல்களைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்றுக்கொள்கிற உரிமை அளிக்கப்பட்டால்தான் இச்சிக்கல் தீரும்.

நம் இந்திய சமுதாயம் பல பண்பாடுகளைக் கொண்டதாக அமைந்திருப்பதால் தேசிய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் பேணிக்காக்க வேண்டுமென்பதில் நாம் அக்கறை காட்டுகிறோம். ஆனால், அத்தகைய அக்கறையானது ஒருவனது சொந்த சமயத்தின் வீழ்ச்சிக்கு அடிப்படையாகக் கூடாது. நம்முடைய இன்றைய வாழ்வு நம் வரலாற்றின் அடிப்படையில் அமைந்தது. நம் வரலாற்றை நாம் அழித்துவிட்டு அதை மாற்றி அமைக்க

முடியாது. நமது நாகரீக வளர்ச்சியை நாம் புரிந்துகொண்டோம் என்றாலும் இல்லை என்றாலும், அதைச் சார்ந்தே நமது வாழ்வியல் விழுமங்கள் உருவாகியுள்ளன. எனவே நம்மை நாமே புரிந்து கொள்ளவும், நம் வாழ்க்கை விழுமங்களைப் புரிந்துகொள்ளவும், நம் சமயத்தின் அடிப்படை நூல்களைக் கற்கவேண்டுவது இன்றியமையாததாகும்.

இறுதியாக, விழுமம் என்பது ஒரு தத்துவக் கருத்து என்ப தனையும் கருத்திற் கொள்ளவேண்டும். உண்மையான அறிவையும் வாழ்வின் இலட்சியத்தையும் உரிய வழியில் அடைய ஒருவனுக்கு வழிகாட்டுவது விழுமம் பற்றிய தத்துவம். வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி நடைபோடும் திறனை அடையவேண்டும் என்ற விழிப்புணர்வை ஒருவனுள் ஏற்படுத்துவதே, விழுமத்தைப் புரிந்துகொள்வதன் பயன் எனலாம்.

ஒரு விழுமம் ஏற்கத் தக்கதா இல்லையா என்பதைத் தருக்க ரீதியாகக் காரண காரியங்களோடு பகுத்துணரும் திறனே, உலகம் ஒப்புக்கொண்ட ஒரு விழுமத்தை தன் அன்றாட வாழ்வில் செயல் படுத்துவதற்கும், அதனால் ஏற்படும் 'உள்மனப் போராட்டங்களை' வெல்வதற்கும் உதவும்.

சமயச்சார்பு விழுமங்கள் உயர்ந்த இலட்சியங்களை அடையத் தேவையான வழிமுறைகளை அறிய ஒருவனுக்கு உதவும். தன்னை உணர்தல், அவாக்களினின்றும் விடுபடல், பொருட்பற்றின்றித் தாமரையிலைத் தண்ணீர் போல் வாழ்தல் ஆகியன சமய விழுமங் களைப் போற்றிவாழும் ஒருவனை அடையாளம் காட்டுவன.

கல்லூரிகளில் சமயக்கல்வி பின்வருமாறு அமையவேண்டும்.

" உலக சமயங்களைப் பற்றிய பொதுக்கல்வி பட்டப்படிப்பின் முதலாண்டில் அளிக்கப்படலாம். அடுத்தடுத்த வகுப்புகளில் அவைத் தொடர்பான மேற்படிப்பு இடம் பெறலாம். உலக சமயத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள், உலக சமயங்களின் புனித நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்சில பகுதிகள் ஆகியவை இப்பாடத்திட்டத்தில் இடம் பெறலாம். நவீன சமுதாயத்திற்குப் பொருத்தமான ஒரு புதிய கண்ணோட்டத்தை வளர்க்கும் வகையில், நம் மரபுகள் பண்பாடுகளைத் தழுவியும், பிற உலக சமயங்களின் மரபுகள் பண்பாடுகளை உள்ளடக்கியும், சமயக்கல்வி இருக்கலாம்; இருத்தல் வேண்டும். "

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

டாக்டர் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
முதல்வர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 49, இதழ் 6, பக்கம் 329 இன் தொடர்ச்சி.)

அருளென்னும் அமுது :

மனிதனை அடையாளம் காட்டவென்றே சில அரும்பண்புகள் உள்ளன. சிவகனைச் சிறந்த நம்பியென்று சொல்லவந்த தேவர், பலபண்புகளை அடுக்கும் போது அருளுக்கு முதலிடம் தருகிறார், தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய இக்கருணை சிவகனிடம் முதன்மை பெற்றமைக்குச் சிந்தாமணியுள் சான்றுகள் பல உள்ளன.

அருள் வலியாண்மை கல்வி ... (சிந். 1165) என்று தொடர்ந்து வரும் அருங்குணங்களின் பட்டியல் – பகைவனும் கட்டியங்காரன் வாயிலிருந்து வந்தது - என்று சென்ற தொடரில் இதே செய்தி வேறுகோணத்தில் காட்டப்பட்டது.

கம்பர் இதே அருள் உணர்வால் ஏற்பட்ட இலக்குவனின் நிலைமாற்றம் பற்றிக் குறிப்பிடுகிறார். கார்காலத்தில் வருவதாகச் சொன்ன வாக்கைக் காப்பாற்றாமல் கள்ளுண்டு தடுமாறி நிற்கும் சுக்ரீவனைப் பார்க்க இலக்குவன் வருகிறான். அவனது சீற்றம் அனுமனின் வழியில் நிறுத்தப்பட்ட தாரையைக் கண்டபின் அருளாக மாறுகிறது என்பது இராமாயணச் செய்தி. தாரையின் குரலால் தலைநிமிர்ந்த இலக்குவனுக்குத் தாய்மார்கள் நினைவு வரவே

அருள்வரச் சீற்றம் அஃகியது (கம். 4319)

என்றார் கம்பர்.

கண்ணைவிட்டகலாக் கவின் :

அழகான பொருள்களைப் பார்க்கும் போது ஆர்வம் காரணமாகக் கண்ணிமைக்க மறந்து போகும். சிவக நம்பியின் அழகு மங்கையர் கண்களுக்கு விருந்தாகியது. பெண்களின் கண்கள்

அவன் மேனிமேல் மொய்த்தன என்கிறார் தேவர். இது உவமை யாகுமளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. வாவியில் மனிதர்கள் மொய்ப்பது, சீவகன் மேல் மகளிர் கண்கள் மொய்ப்பது போல என்று வந்தது.

அண்ணன்மேல் அரிவையர் கண்ணின் மொய்த்த (சிந். 1206) கம்பர் இராமனைப் பார்த்த மகளிரின் கண்கள் அந்தந்த உறுப்புக் களைவிட்டு அகலவேயில்லை என்று சிந்தாமணிக் கருத்திற்கு மெருகு ஏற்றினர்.

தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலமன்ன
தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாருமஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ் கொண்ட சமயத்தன்னான் உருவு கண்டாரை யொத்தார்
(கம். 1081)

ஆறும் கூந்தலும் :

இடைவிடாத நீரொழுக்கைக் கொண்ட ஆறு கூந்தலைப் போன்றது என்பது ஓர் அரிய உவமை. கூந்தலின் அடர்த்தி, திரட்சி, நெடுமை, நெளிவு. மணம், நவினம் அனைத்தும் ஒருசேர நினைவுக்கு வருமாறு அவ்வுவமை அமைகிறது.

அங்கநாட் டரிவையர் கூந்த லறுத்தேன்
எங்கு மொய்த் திழிவதோர் யாறு தோன்றுமே. (சிந். 1199)

கம்பர் இராவணன் சீதையை எடுத்துப்போனபின் அவள் கூந்தலில் இருந்த மாலை வந்து கிடந்தது போலக் கோதாவரி அமைந்தது என்றார்.

சீதை போகின்றுள் கூந்தல் வழீஇ வந்து புவனம் சேர்ந்த
கோதை போல் கிடந்த கோதாவரியினைக் குறுகிச் சென்றார்
(கம். 4620)

குணக்கடல் :

இறைவனை (அருகதேவனை) குணக்கடல் என்று வருணித்தது சிந்தாமணி. எல்லையில்லாக் குணங்களுடையான் என்பதுபொருள். ஆதலால் அவனைக் குணக்கடல் என்றது சாலும்.

அலைகயில்லாக் குணக்கடலே யாருமறியப் படாயாதி
(சிந். 1244)

கம்பர் இதே அழகை அனுபவிக்கிறார்.

அவர் நற்குணக்கடல் ஆடுதல் கன்றரோ (கம். 2)

இருவர் சிந்தையும் ஒன்றே :

காதல் உணர்வு இருபாலார்க்கும் சமமே. அவன் வருந்தினால் அவளும் வருந்துவாள். சீவகனின் உணர்வுகள் பதுமை உள்ளத்திலும் பாதிப்பு ஏற்படுத்தியது.

அண்ண லவ்வழி ஆழ்துயர் நோயுற
வண்ண மாமலர்க் கோதையு மவ்வழி
வெண்ணெய் வெங்கனன் மிமிசை வைத்ததொத்து
உண்ணை யாவுரு காவுன ளாயினள். (சிந். 1309)

கம்பர் சீதையைக் காதல் நோயினளாகக் காட்டிய பின்பு, இராமன் படும் அவதியை இனிச் சொல்வேன் என்று அடிகோலிக் கொள்ளும் அழகை நோக்கலாம்.

என இன்னன பன்னி, இருந்து உளைவாள்
துனி உன்னி, நலம் கொடு சோர்வுறு கால்
மனை தன்னில் வயங்குறும் வைகிருள் வாய்
அனகன் நிலைகின்றன யாம் அறைவாம். (கம். 1171)

உடம்பும் உயிரும் :

பதுமையை விட்டுச் சீவகன் பிரிய நினைக்கிறான். நள்ளிருளில் அவளறியாமல் தன்மேல் அவள் வைத்திருந்த கையை (நம்பிக்கையைஅல்ல) அகற்றிவிட்டு உடம்பை விட்டு உயிர் போவது போல அகன்றான்.

நயங்கிள ருடம்பு நீங்கி நல்லுயிர் போவதே போல்
இயங்கிடை யறுத்த கங்கு லிருளிடை யேகினானே (சிந். 1360)

கம்பருக்கு இந்த உவமை மிகவும் பிடித்தது, என்றாலும் அவர் நேர் எதிர் திசையில் இதனைப் பொருத்திக் காட்டுகிறார். உயிரை உடம்பு இப்பிறப்பில் தொடர்வது என்ற முறையில் திருமணத்தின்போது இராமனைச் சீதை பின்தொடர்கிறாள்.

மடம்படு சிந்தையள் மாறுபிறப்பின்
உடம்பு உயிரைத் தொடர்கின்றதை ஒத்தாள் (கம். 1249)

தேவர்வழிநடந்து இலக்கிய உலகில்தனியிடம் தேடிக்கொண்டார் கம்பர் என்பதில் ஐயமில்லை.

(வளரும்)

கேன்சர் நோயைத் தடுக்கும் மஞ்சள்

உணவுப் பொருட்களில் மஞ்சள் சேர்ப்பதன் மூலம், கேன்சர் நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஐதராபாத்தில் உள்ளது தேசிய சத்துணவு இன்ஸ்டிடியூட். இந்த அமைப்பைச் சேர்ந்த டாக்டர்கள் கல்பகம் போலசா, கமலா கிருஷ்ணசாமி ஆகியோர் ஆய்வு செய்து இதைக் கண்டு பிடித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:

இந்திய உணவுப் பொருட்களில் மஞ்சள் இன்றியமையாத ஒன்று. மஞ்சள் சிறந்த நோய்த் தடுப்பு மருந்தாகச் செயல்படுகிறது. தற்போது கேன்சர் நோயைக் கட்டுப்படுத்தும் வலிமையும் மஞ்சளுக்கு உண்டு என்பது ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சிகரெட் புகைப்பவர்களுக்கு கேன்சர் நோய் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் மஞ்சளை உணவுப் பொருட்களில் தவறாமல் சேர்த்து உட்கொண்டுவந்தால் கேன்சர் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

கேன்சர் நோயைக் கட்டுப்படுத்தும் வலிமை மஞ்சளுக்கு உண்டா என்பதைக் கண்டறிய முதலில் எலிகளைப் பயன்படுத்தி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பின்னர் மனிதர்களிடம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. முதலில் எலிகளுக்கு மஞ்சள் கலந்த உணவு ஒருமாத காலத்துக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் சக்திவாய்ந்த கேன்சர் ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் ஊசி மூலம் அந்த எலிகளின் உடலில் ஏற்றப்பட்டன.

அந்த எலிகளின் சிறுநீரகத்தை எடுத்துப் பரிசோதித்துப் பார்த்ததில் கேன்சர் நோய் வாய்ப்பு அவ்வளவாக இல்லை. ஆனால் மஞ்சள் கலந்த உணவு கொடுக்கப்படாத எலிகளுக்கு அந்த ஊசி ஏற்றப்பட்டு அவைகளின் சிறுநீரகத்தைப் பரிசோதித்து பார்த்ததில் அந்த எலிகளுக்கு கேன்சர் நோய் ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து மனிதர்களிடம் இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

சிகரெட் புகைப்பவர்கள் ஒன்பது பேர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1.5 கிராம் அளவில் உள்ள மஞ்சள் மாத்திரைவடிவில் ஒருமாத காலத்துக்கு கொடுக்கப்பட்டது. பின்னர் அவர்களைப் பரிசோதித்துபார்த்ததில் கேன்சர் நோய் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தது தெரிய வந்தது.

இதன்மூலம் மஞ்சளுக்குக் கேன்சர் நோயைக் கட்டுப்படுத்தும் வலிமை உள்ளது என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர். நன்றி. — தினமலர். (மதுரை)

கட்டுரை எண். 27.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

தருமபுரம்.

(மலர் 49, இதழ் 5, பக்கம் 249 இன் தொடர்ச்சி.)

இறைவன் உயிர்களோடு ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பன் என்பதற்கு உபநிடதங்களில் வரும், "பிரமம், அத்துவிதம்" என்னும் வாக்கியமே பிரமாணம் என்பது முனிவர் கருத்து. "அத்துவிதம் என்பதற்கு 'ஒன்று'" என்பதே பொருள்; அங்ஙனம் இருக்க, "அத்துவிதம்" என்பது, மூன்றாயும் (ஒன்றாய் வேறாய் உடனாய்) இறைவன் இருக்கிறான் என்பதைக் குறிப்பதாகக் கூறுவது பொருந்தாது என்பார் கூற்றினை எடுத்துக் கொண்டு, சிவஞான முனிவர் இரண்டாம் சூத்திரத்து முதல் அதிகரணத்தில் விளக்கம் தருகின்றார்.

"இறைவனும் நானும் ஒன்று என்று கூறும்பொழுதே இறைவன் என்ற ஒருவன் இருக்கிறான்; உயிர் என்ற மற்றொன்று இருக்கிறது என்பது புரிகிறதன்றோ. அங்ஙனமெனில் இறைவனும் உயிரும் வேறுவேறுதானே என முதலில் கேட்கிறார். மேலும், "அத்துவிதம்" என்பதற்குப் பொருள் 'ஒன்றுதான்' எனில், ஒன்று என்றே கூறிவிடலாமே! அத்துவிதம் என்று ஏன் கூறவேண்டும்? என்று அடுத்துக் கேட்கிறார்'

ந + துவிதம் = அத்துவிதம். வடமொழியில் "ந"காரம், தமிழ்மொழியில் 'அ'கரம் தரும் எதிர்மறைப் பொருளை உணர்த்தும். ஈண்டு 'ந'காரம் [அ] இன்மை, மறுதலை, அன்மை என்னும் மூன்று பொருள்களையும் குறிக்கும்.

"அசுத்தம்" என்னும் சொல்லில், 'அ'கரமானது, சுத்தமே இல்லாத என்ற கருத்தில் இன்மைப் பொருளில் எடுத்தாளப்படுகிறது.

"அதர்மம்" என்ற சொல்லில் 'அ'கரமானது, தருமத்திற்கு எதிரானது என்ற கருத்தில் மறுதலைப் பொருளில் எடுத்தாளப் படுகிறது.

"அப்பிராமணன்" என்ற சொல்லில், 'அ'கரமானது, பிராமணன்தான்; ஆனால் பிராமணத் தன்மையின்றி இருக்கிறான், என்ற கருத்தில் அன்மைப் பொருளில் எடுத்தாளப்படுகிறது.

சண்டு, "இன்மை" என்பது அறவே இல்லாதது என்னும் பொருளையும், "மறுதலை" என்பது எதிரிடையானது என்னும் பொருளையும், "அன்மை" என்பது இருந்தும் இல்லாதது என்னும் பொருளையும் உணர்த்துவதைக் காணலாம்.

இக்கருத்துக்களில், அத்துவிதம் என்னும் சொல்லில் உள்ள 'அ'கரம் என்ன பொருளில் கையாளப் படுகிறது என்பதைக் காண்பதில்தான் கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன.

மெய்கண்டார் கருத்து, அத்துவிதத்தில் உள்ள 'அ'கரம் அன்மைப் பொருளில் கையாளப்பட்டுள்ளது என்பதாகும். அஃதாவது, இறைவனும் உயிரும் இரண்டுதான் [வேறு வேறுதான்] ஆனால் இரண்டு தன்மையின்றி ஒன்றாகியுள்ளன எனக் கூறுகிறார்.

"அத்துவைதம்" என்பதற்குப் பொருள் கண்டவர்களில் சங்கரர் இன்மைப் பொருளிலும் (அதாவது ஒன்றே என்னும் பொருளிலும்) மாத்துவர் மறுதலைப் பொருளிலும் (அதாவது இரண்டும் வேறு வேறு என்னும் பொருளிலும்) இராமானுஜர் இன்மைப் பொருளிலும் (அதாவது இறைவன் ஒருவன்; அவனிடத்து உலகு, உயிர் அடங்கிநிற்கும் என்னும் பொருளினும்) விளக்கம் கூறினர்.

இவற்றைச் சைவ சித்தாந்த கலைச் சொல்லில் கூறவேண்டும் எனில், சங்கரர் ஒன்றாய் இருக்கின்றான் என்றார்; மாத்துவர் வேறாய் இருக்கின்றான் என்றார். இராமானுஜர் உடனாய் இருக்கின்றான் என்றார். சைவசித்தாந்தம், இவை மூன்றாகவும் இறைவன் இருக்கின்றான் என்கிறது. சங்கரர் கொள்கை கேவலாத்வைதம் என்றும், மாத்துவர் கொள்கை துவைதம் என்றும், இராமானுஜர் கொள்கை விசிஷ்டாத்வைதம் என்றும் கூறப்பெறும். சைவசித்தாந்தம் கூறும் கொள்கை சுத்தாத்வைதம் எனப்பெறும். சங்கரர் கொள்கை ஏகான்மவாதம் என்றும் கூறப்பெறும்.

(தொடரும்)

பூசலார், மானியார், நேசர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,

தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 3—6—90 ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக்கிழமையன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

காலை 9-30 மணி இருக்கும். திருமடத்து நூலக வாயிலில் அன்பர்கள் நின்றிருந்தனர். சிலர் உள்ளே சென்று நூல்களை விலைக்குப் பெற்றுக் கொண்டிருந்தனர். சைவ சமயசாத்திரங்கள், தோத்திரங்கள் முதலிய அந்த நூல்களின் விலையோ மிகமலிவு! அடக்க விலைப் பதிப்புக்கள் அவை! தருமை ஆதீனம் மொழிக்கும் சமயத்துக்கும் ஆற்றும் அரும் தொண்டுகளில் அரிய நூற்பதிப்பும் ஒன்று அல்லவா!- சிந்தித்தவாறே திருமடத்து வாயிலிலிருந்தேன். நாதசுர ஒலிகேட்டது ஸ்ரீ சொக்கநாதர் பூசை நிறைவடையும் நேரம். உள்ளே விரைந்து சென்றோம். தீப ஒளியில் பெருமானைத் தரிசித்தோம்.

ஸ்ரீ சொக்கநாதர் பூசை நிறைந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் பண்டாரக்கட்டிற்கு எழுந்தருளினார்கள். பாராயணமும் ஆயிற்று. அன்பர்கள் உள்ளே சென்று ஸ்ரீலஸ்ரீ குருமணிகளை வணங்கித் திருநீறுபெற்று அமர்ந்தனர். உபதேசம் தொடங்கிற்று. முதலில் மாதச் சிறப்பு நாட்கள் பற்றி அருளிப் புராண உரை தொடர்ந்தார்கள்.

அன்று பூசலார், மங்கையர்க்கரசியார், நேசநாயனார் ஆகிய மூன்று நாயன்மார்கள் பற்றிய வரலாற்றை உபதேசித்தார்கள்.

" மன்னிய சீர் மறைநாவன், நின்றவூர்ப் பூசல் "

என்ற தொடரால் சுந்தரர் பூசலார் நாயனாரைக் குறித்தருளினார்.

பூசல் என்னும் சொல்லும் ஆர் என்னும் சிறப்புக் குறிக்கும் விகுதியும் சேர்ந்து பூசலார் என்ற நாயனாரின் பெயர் அமைந்துள்ள அமைப்பைச் சுட்டி அரிய பெயர்க்காரணம் காட்டினார்கள்.

" அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் "

என்பது குறள். இக்குறளில் 'பூசல்' என்ற சொல் அன்பை வெளிப் படுத்துவது என்னும் பொருளில் அமைந்துள்ளது. எனவே பூசலார் என்பது " அன்பை வெளிப்படுத்திய அருளாளர் " எனக் காரணப் பெயராய் அமைதலைச் சுட்டிப் புராண வரலாற்றின் வாயிலாக விளக்கினார்கள்.

தொண்டை நாட்டுத் திருநின்ற ஊர் என்பது பூசலார் நாயனார் தலம். இவ்வூர் தற்போது தின்னனூர் என மருவி வழங்குகின்றது இவ்வூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் பூசலார். தம் உணர்வு அத்தனையும் சிவனுக்கே ஆக்கியவர். சிவநெறி பிறழாத அன்பு வளர்ந்தோங்கப் பெற்றவர். சிவபெருமானுக்கும் சிவனடியார்க்கும் பணி செய்தலே மனிதப்பிறவித் தக்கது என்னும் துணிவு கொண்டவர். வேதக்கலையில் அறிவும் தெளிவும் நிரம்பப்பெற்றவர்.

இவர் இறைவனுக்குத் திருக்கோயில் ஒன்று அமைக்கவேண்டும் எனக் கருதினார். கருதிய செயலைச் செய்ய மாநிதி வருந்தித் தேடினார். " எனைத்தும் ஓர் பொருள் பெற இயலவில்லையே " என மனம் நைந்தார். முடிவாக, தம் மனத்தின் உள்ளேயே கோயில் கட்டத் துணிந்தார். மனத்தினால் நன்கு கருதித் தேவையான - தினையளவுள்ள பொருளாயினும் விடாது-சிறிது சிறிதாகத் தேடி மனத்தில் சேர்த்தார்.

கோயில் கட்டும் சாதனங்கள், தச்சர் முதலானோரையும் மனத்தினால் அமைத்தார். ஒரு நல்ல நாளில் நல்ல வேளையைக் குறித்தார். சிவாகம விதிப்படி அடிநிலை (அஸ்திவாரம்) கோலினார். அதுமுதல் அன்பின் நிறைவு கொண்டு ஆர்வத்துடன் இரவு பகல் பாராது மனத்திலேயே கோயில் எழுப்பலானார். அடிவரி முதல் உபாதான வரிவரையுள்ள அடுக்குகளைச் சிற்பவேலைப்பாட்டுடன் அமைத்தார். விமான முடிவில் சிகரம் ஒருமுழம் அளவுள்ளதாக வைத்தார். தூபி அமைத்தார்; சுதை வேலைகள் செய்யப்பட்டன. கிணறு அகழப்பெற்றது. திருமதில்கள் எடுப்பிக்கப் பெற்றன. திருக்குளம் தோண்டப் பெற்றது. மிகவும் அரிதின் முயன்று விதி வழுவாமல் மனத்தினால் அமைத்த திருக்கோயில் - கட்டி நிறைவேற்றிய பெருமானைத் தாபிக்க வேண்டுமே! நல்ல நாள் பார்த்தார். உரிய வேளையையும் குறித்தார்.

பூசலார் கோயில் கட்டி இறைவனை எழுந்தருளச் செய்யக் கருதிய நாளும் பல்லவமன்னன் காஞ்சிபுரத்தில் சிற்பவேலைகளுடன் கருங்கற் கோயில் கட்டி இறைவனை எழுந்தருளச் செய்யக் கருதிய நாளும் வேளையும் ஒன்றாகவே அமைந்தன. அந்நாளின் முதல் நாள் மன்னன் கனவில் இறைவன் தோன்றினார்.

“ நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்துசெய்த
நன்று நீடு ஆலயத்துள் நாளைநாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்
டருளப் போனார் ”

சிவபெருமான் கனவில் காட்சி நல்கியருளினார். உடன் பல்லவன் அத்திருப்பணிசெய்தாரைத் தரிசித்து வணங்க விரும்பினான். பரிவாரங்களுடன் திருநின்றவூர் சார்ந்தான். விசாரித்தான், அங்கிருந்தோர் “ இங்குப் பூசலார் கட்டிய கோயில் ஒன்றுமில்லை” என்றனர். அரசன் அந்தணர்களனைவரையும் அழைப்பித்தான். அவர்களை நோக்கி “ மாசிலாப் பூசலார் தாம் யாவர்? ” என வினவினான். மறையோர், ‘அவர் வேதியர்; இவ்வூரினர்’ என்றனர். அவரை அழைக்கவுடன் புறப்பட்டனர். அவரை அழைக்கவிடாமல் இருப்பிடம் கேட்டுத் தாமே சென்று பூசலாரைக் கண்டான். ‘நீர் இங்கு எண் திசையோரும் போற்ற எடுத்த ஆலயம்தான், யாது ? “ அண்டர் நாயகரைத் தாபிக்கும் நாள் இது ” என அறிந்தேன்; உம்மைக் கண்டு அடிபணிய இறையருள் பெற்று வந்தேன்” எனக் கூறினான். பூசலார்திகைத்தார். காடவர்கோனை நோக்கி, என்னையும் ஒருபொருளாகக் கொண்டு இறைவனார், அருளிச் செய்தார்; பொருள் இல்லாமையால் மனத்தினாலே முயன்று செய்த கோயில் இப்படிப்பட்டது என்பதை விளக்கமாக எடுத்துக் கூறினார்; பல்லவமன்னன் அதிசயம் அடைந்தான். “என்னே புரையறு சிந்தை அன்பர் பெருமை!” என்றான். நிலமுற விழுந்து வணங்கிப்போற்றி விடைபெற்றுச் சென்றான்.

இப்பல்லவ வேந்தன் பெயர் இராஜசிம்மன் என்பது. இவன் காஞ்சி கைலாயநாதர் கோயிலைக் கட்டியவன். இவ்வரசன் மலங்களை நீத்தவன், சைவசித்தாந்த மார்க்கத்தைச் சார்ந்தவன் (சைவ சித்தாந்த மார்க்கே, சகலமலா பாரகே) எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன மேலும், இவன் ‘கலியுகத்தில் வானொலி கேட்டவன்’ என்றும் கல்வெட்டுக் கூறுகிறது. இது பூசலார் பொருட்டு இறைவன் இவன் கனவில் எழுந்தருளிச் செய்தமையைக் குறித்ததாகலாம் என்பர் ஆராய்ச்சியாளர்.

பூசலார் மனத்தினால் அமைத்த கோயிலில் உரியநாளில், உரியவேளையில் இறைவனைத் தாபித்தார். நித்திய நைமித்திக பூசைகளை மனத்தினாலே ஆற்றினார். இங்ஙனம் அகப்பூசைசெய்தும் அகத்தில் ஆலயம் அமைத்தும் வழிபாடுகளைச் செய்தும் பூசலார் ஆற்றியதொண்டின் மேன்மையைச் சிறப்பித்து உபதேசித்தார்கள்.

அடுத்து, மானியார் வரலாறு தொடர்ந்தார்கள். மானியார் என்று சுந்தரால் குறிக்கப் பெற்றவர் மங்கையர்க்கரசியார். "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை, வரிவளைக்கைமடமானி" என்று திருஞானசம்பந்தர் அருளினார். இவ்வாக்கை ஒட்டியே சுந்தரர் இவரைத் திருத்தொண்டத்தொகையில், "வரிவளையாள் மானிக்கும்" என்ற தொடரால் குறித்தருளினார்.

இவர்பெருமைகளைத் தொகுத்துச் சுட்டக் கருதியசேக்கிழார்,

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடுஆள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நாடு உற்றதுயர் நீக்கித், தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றல் ஆமே!"

எனச் சிறப்பித்து ஒதித் தோத்திரமாக வரலாறு அருளினார். ஞானசம்பந்தரின் வாக்கினாலேபாடப்பெற்ற சிறப்பினர். நின்றசீர் நெடுமாறனின் தேவியாராகிய இவர்சிவ நெறிபரப்பி நாடுதிருத்தி நலம்பல எய்துவித்தவர். மானி- என்னும் சொல் மானம்உள்ளவள் என்னும் பொருளது. இது இவர் இயற்பெயர். மங்கையர்க்கரசி என்பது ஞானசம்பந்தர் குறித்தருளியசிறப்புத்திருப்பெயர் பிறந்த இடத்தையும் புகுந்த இடத்தையும் பெருமை பெறச் செய்த சிறப்பினர். இவர்வரலாறு திருஞானசம்பந்தர் புராணத்தில் அருளிச் செய்யப்பட்டமையைச் சுருக்கமாகப் புலப்படுத்தி நேசநாயனார் வரலாறு தொடர்ந்தார்கள்.

நேசநாயனார் காம்பீலி என்னும் திருநகரைச் சேர்ந்தவர். இந்நகரம் ஹம்பி என்னும் விஜயநகரத்துக்கு வடக்கே உள்ளது என்பர் சிலர். சிலர் பெல்லாரி மாவட்டத்தில் உள்ள காம்பீலி என்பது இது என்பர். இந்நாயனார் தஞ்சை மாவட்டம்

மயிலாடுதுறை கூறைநாட்டைச் சார்ந்தவர் என்ற வரிஊ பரம்பரைச் செய்தியும் உண்டு. நேசர் இறைவன்பால், இறையடியார்பால் நேயம் கொண்டவர் எனவே நேசர் என்பது காரணப் பெயராக அமைகிறது - இங்ஙனம் சுட்டிய குருமணிகள் அவர் தம் திருத்தொண்டின் திறம் அருளினார்கள்.

இவர் அறுவையர் குலத்தினர். சிவனடியார்பணிகளைத் தலைமையாக மேற்கொண்டவர்; அவர்கள் தம் திருவடிகளைத் தலையிற் சூடும் தகைமையர். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றாலும் தொண்டு செய்த தூயவர். மனத்தின் செய்கையினை அரன் அடிப் போதுக்கு ஆக்கியவர்; வாக்கின் செய்கையை ஐந்தெழுத்துக்கு ஆக்கினார். கைத்தொழிலின் செய்கையாகத் தம்பிரான் அடியார்களுக்குப் பாங்கான ஆடைகள், கீள், குற்றமற்ற கோவணம் ஆகிய வற்றை நெய்து அடியார்களின் குறிப்பறிந்து அவற்றை இடையறாது அளித்தவர். இங்ஙனம் முக்கரணத்தாலும் தொண்டு செய்தார் என்பதை விளக்கிச் சேரமான்பெருமாள் நாயனார், பொன்வண்ணத்தந்தாதியில் அருளிச்செய்த,

"சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன்
கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன்
மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறு அணி ஈசற்கு
யான் இவை விதித்தனவே"

என்னும் திருப்பாடலை மேற்கோள் காட்டி ஒப்பிட்டு உணர வைத்தார்கள்.

இங்ஙனம் சைவசித்தாந்த நெறிவிளக்கமாக அமைந்த அருளுபதேசம் நிறைவுற்றது. பண்டாரக்கட்டிற்கு வெளியே இன்சுவைத் தீங்கனிச்சாறு தாகசாந்திக்குக் கிடைத்தது. பருகினோம். இனிய சிந்தனைகளை எந்தி இல்லம் அடைந்தோம்.

முத்திறத்தால் வழிபட்டு முதற்சைவ நெறியுணரப்
புத்திமிக மிகநல்கும் புனிதகுரு வருள்போற்றி!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் சிறப்பு வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன. பிரமோதூத-ஆனி- ஆயில்யநாள் ஆலயவழிபாடு 26—6—90 செவ்வாய்க்கிழமை கீழ்வேளூருக்கு அருகில் உள்ள திருச்சாட்டியக்குடியில் உள்ள திருக்கோயிலில் நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப் பெற்றன. அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கியருளும் பெரியபுராண அருளுரை 1—7—90 ஞாயிற்றுக்கிழமை காலை திருமுறைப் பாராயணத்துடன் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவசித்தாந்த நெறிவிளக்கம் அருளும் வகையில் கோச்செங்கட்சோழநாயனார் புராண உபதேசம் செய்தருளினார்கள். சோழர் மரபின் சிறப்பு, கோச்செங்கட் சோழரின் முற்பிறவி வரலாறு அருளினார்கள். 'தென்னவனாய் உலகாண்ட' என்ற தொடரின் பொருளைத் தடைவிடைகளோடு மனங்கொள விளக்கினார்கள். ஆதீன அடியார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அன்பர்கள் கேட்டுப் பயன் பெற்றனர்.

தருமை ஆதீன அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி., தொல்காப்பியத்தில் புணரியல் பற்றி விளக்கம் நல்கினார்கள். அடுத்து 5—8—90 அன்று 109 ஆவது அருளுபதேசம் நடைபெறும். அன்பர்கள்கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

திருஞானசம்பந்தர் திருக்கல்யாணப் பெருவிழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் என வழங்கும் திருப்பெருமணநல்லூர் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழாவும் சிவஜோதி தரிசனமும் தேவஸ்தானத்தின் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் 9—6—1990 அன்று சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணிக்கு சங்கீதபூஷணம் திரு. A.N. சீனிவாசன்

குழுவினரால் இன்னிசைக்கச்சேரி நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் விழாவில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை விழா

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் திருக்கோயிலிலும் ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை விழா 9—6—90 சனிக்கிழமை நிகழ்ந்தது சமயாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தப் பெற்றன.

தருமபுரத்தில் தருமை ஆதீனக் கலைக்கல்லூரி பேராசிரியர் திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., எம். ஃபில்., திருஞானசம்பந்தர் அற்புதப்பதிகங்கள் என்ற தலைப்பில் உரையாற்றினார். சிதம்பரத்தில் திருமுறைக் கலாநிதி திரு. எம். கனகசபைப் பிள்ளை திருமுறைஓத சிரோன்மணி சிவஸ்ரீ டி. துரைசாமிரத்தின தீக்ஷிதர் தலைமையில் சைவசித்தாந்தப்புலவர் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. ஜி. ராகவன், எம். ஏ., பி. எட்., திருஞானசம்பந்தர் அருள் வரலாறும் அற்புதப் பதிகங்களும் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

வேளூரில் வசந்தோற்சவம்

தருமைஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் 30—5—90 புதன்கிழமை முதல் தொடங்கி 8—6—90 வெள்ளிக்கிழமை வரை பத்துநாட்கள் வசந்தோற்சவ விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. பத்து நாட்களிலும் சுவாமி, அம்பாள் புறப்பாடாகி வசந்த மண்டபத்தில் ஊஞ்சல் உற்சவம் கொண்டருளிய காட்சியை அன்பர் பலர் தரிசித்து அருள்பெற்றனர்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜைவிழா 27—6—90 புதன்கிழமையன்று ஆனி மகநாளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை சமயாசாரியர் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேகஆராதனைகள் நடைபெற்றன. மாலை 6-30 மணியளவில் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் புலவர் திரு. கே. கணபதி, எம். ஏ., பி. எட்., மாணிக்கவாசகர் அருள் வரலாறு பற்றியும் பேராசிரியர் திரு.இரா. மருதநாயகம், எம். ஏ., எம். ஃபில்., மாணிக்கவாசகர் அருள் நூல்கள் பற்றியும் உரையாற்றினர். இரவு 8-00 மணியளவில் திருவீதியுலா நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

சிதம்பரத்தில் :

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் ஸ்ரீசமயாசாரியர் சந்நிதியில் சொற்பொழிவு நிகழ்ச்சி திருமுறைக் கலாநிதி திரு. எம். கனகசபைபிள்ளை திருமுறைப் பண்ணிசையுடன் தொடங்கி நிகழ்வுற்றது. சிவஸ்ரீ சிரோமணி த. சுப்பிரமணிய தீக்ஷிதர் தலைமையில் சைவசித்தாந்தப் புலவர் திரு. ஜி.இராகவன், எம்.ஏ., பி. எட்., மாணிக்கவாசகர் அருள்வரலாறும் நூல்களும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் வழிபட்டும் சொற்பொழிவைக் கேட்டும் பயன்பெற்றனர்.

வேளூரில் சம்வத்ஸராபிஷேகம்

சிவாலயங்களுக்குக் குடமுழுக்கு நடைபெற்ற திருநாளை அடுத்துவரும் ஆண்டுகளில் அபிஷேக ஆராதனைகளுடன் கொண்டாடுவதை சம்வத்ஸராபிஷேகம் என்பர். தருமை ஆதீனத் திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருக்கோயிலில் 2—7—69 சௌமிய ஆண்டு ஆனித் திருவோண நாளில் குடமுழுக்கு நிகழ்வுற்றது. இதன் நினைவாக பிரமோதூத ஆண்டு ஆனித்திங்கள் 26 ஆம் நாள் 10—7—1990 செவ்வாய்க்கிழமையன்று சம்வத்ஸராபிஷேகம் நடைபெற்றது. வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், ருத்ரஜெபம் முதலியவற்றுடன் அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் பலர் தரிசித்துப் பயன்பெற்றனர்.

திருமுறை வேள்வி விழா

சிவபெருமானுக்கு மிக உகந்த திருவாதிரை நாளில் அப்பர் சுவாமிகள் பாடியருளிய 6 – ஆம் திருமுறை முற்றோதல் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் சுவாமி திருக்கோயில் சந்நிதியில் 23—6—90 சனி காலை 9மணிக்குத் தொடங்கி மாலை 7மணியளவில் நிறைவு பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் மாலையில் எழுந்தருளி வழிபாடு ஆற்றி 6 – ஆம் திருமுறை முற்றோதலை நிறைவு செய்து அருளாசி வழங்கினார்கள். ஓதுவாமூர்த்திகளும் புலவர்களும் கலந்து கொண்டுதிருமுறை ஓதினர், உள்ளூர் அன்பர்களும் பிரமுகர்களும் பொதுமக்களும் செவிமடுத்துக் கேட்டுய்ந்தனர்.

திருக்குவளையில் பிரமோற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என்னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 20-5-90 முதல் 3—6-90 முடிய பிரமோற்சவம் மிச் சிறப்பாக நடைபெற்றது. நாள்தோறும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக்காட்சி நிகழ்ந்தது திருவீதியுலாவின் போது வேத பாராயணமும் திருமுறைப் பாராயணமும் நிகழ்ந்தது. திருநாட்களில் அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் தரிசித்தும் கேட்டும் இன்புற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஒய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிரமோதூதஹு ஆடிமீ" 1௳ முதல் 31௳ முடிய)
(17—7—1990 முதல் 16—8—1990 முடிய)

பிரமோதூதஹு ஆனிமீ" 32௳ சோமவாரம் பரணி நக்ஷத்திரம் வணிசை கரணம் கூடிய காலத்தில் சூரியஉதயம் முதல் 44நாழிகை 4விஞடிக்கு மீனலக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் மிதுன ராசியிலிருந்து கடக ராசி சங்கிரமணமாக ஆடி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று தெட்சணாயனபுண்யகாலம். மறுதினம் ஆடிமீ" முதல் தேதி ஆடிப்பண்டிகை, சாந்திர தசமிதிதி தினமாகும். சங்கிரமணகால கிரகஸ்திதி உலகக்ஷேமத்துக்கு சர்வேஸ்வரனுடைய கிருபா கடாட்சம் ஏற்படுகிற வகையில் அமைவுற்றுள்ளது. அதனால் ஆன்றோர்களால் சிவபுண்ணியங்கள் நடைபெற்றுவரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் தவமாமுனிவர்களாக வந்து சிவபுண்ணியங்களைச் செய்தும் பரமனைப் பூசித்தும் சிவசமயம் பரிபாலிக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குரு மகான்கள் லோகத்திற்கு ஜெகத்ரட்சகரான பரமேஸ்வரனின் மகத்துவம் விளம்பியும் சிவபுண்ணியம் ஈஸ்வர தோத்திரம் மூலம் ஈசனருள் பெற சிவநெறி உபதேசித்தும் மாந்தர் உய்வடைய ஆசீர்வதிப்பார்கள். அன்னார் விளம்புகின்ற ஐதிக வழியில் தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் விசேஷ ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்று வரும். மக்கள் அனைவரும் ஈஸ்வரபக்தியில் திகழ்வார்கள்.

சூரிய சந்திர கிரகணங்கள்

பிரமோதூதஹு ஆடிமீ" 6௳ (22—7—1990) பானுவாரம் அமாவாசை பூச நக்ஷத்திரம் கேதுகிரஸ்த சூரிய கிரகணம் இந்தியாவின் வட கோடியில் திருஸ்யா திருஸ்யமாக தெரியும். ஸ்பர்சம் காலை 6-30 மணி மோக்ஷம் 6-59 மணி.

பிரமோதூதஹு ஆடிமீ" 21௳ (6—8—90) திங்கட்கிழமை பௌர்ணமி திருவோண நக்ஷத்திரம் இராகுகிரஸ்தம் கிருஷ்ண வர்ணம் சோமோபராக புண்யகாலம் கௌபேரபரிவா ஸ்பர்சம்

மாலை மணி 6-14. மத்யம் இரவு மணி 7-42; மோட்சம் இரவு மணி 9-10. பரிமாணம் விசம் 11.

ஞாயிற்றுக்கிழமை சூரிய கிரகணம். திங்கட்கிழமை சந்திர கிரகணம் சம்பவிப்பது; சூடாமணி கிரகணம். இது அபூர்வம் ஆகும். இதில் ஸ்நானம் சாந்தி செய்வது மற்ற கிழமைகளில் சம்பவிக்கும்கிரகணங்களை விடச்சிறந்தது. இக்கிரகணசம்பவத்தில் தேவதாவசிய மந்திர உச்சாடனம் செய்யும் மாந்திரீகர்கள் மந்திர உரு ஏற்ற நல்ல சித்தியாகும்.

பதினைந்து தினங்களுள் சூரிய சந்திரகிரகணங்கள் ஏற்படுவதால் உலகில் கொடூரம் யுத்தம் ஏற்படும். பஞ்சம் பசிப்பிணி ஆகிய துர்பிட்சம் காணும் இதனின்றும் மீட்பு இறைவன் கடைக்கண் அருள்பாலிப்பிற்கு மாதம் பூராவும் சிவாலயங்களில் லோக சுபிட்சார்த்தமாக ஹோமயக்ஞங்கள் இலட்சகோடி அருச்சனைகள் செய்ய வேணும். உலகத்தில் எல்லா மாந்தர்களுக்கும் உய்வு ஏற்படும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் அதிகம் தரும். நவீன கம்ப்யூட்டர் சாதனங்கள் வாங்குதல் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்க புகழ் ஏற்படும். நல்ல இரத்தினபூஷணம் தரும். ஆகஸ்டு 8உ அளவில் கட்டடம் வாகனம் இவற்றில் பெரும் முதலீடு செய்ய நேரும். தீர்த்த யாத்திரை சென்று வருதல் தெய்வதரிசனம் செய்தல் ஆகியபுண்ணியபலன் அளிக்கும். எல்லாப்பெரிய காரியங்களையும் மனோலயப்படி திடசித்தமாகச் செய்யும். ஜூலை31, ஆகஸ்டு 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி -மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கண்பஸ்திதிக்கு ஏற்ப வந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்த நிலையை ஏற்படுத்தும். புகழாரம் இரத்தின பூஷணம் அளிக்கும். ஜூலை 24 தேதி முதல் லேவா தேதிகளில் நல்லனவாகுதல் அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வந்து மகிழ்ச்சியாகுதல் புத்திரர்களுக்கு மேன்மை ஸ்திதி ஏற்படுதல் ஆகும். மனைவி நலம் பூமி விருத்தி இவற்றிற்கு முதலீடு செய்தல் சம்பவிக்கும். எல்லாக் காரியங்களும் தெய்வபலனில் இஷ்ட சித்தியாக நடந்து வரும். ஆகஸ்டு 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் நான்கு வகையில் வரச்செய்யும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷ பலனை உண்டுபண்ணும். மேலிடத்தில் நன்மைகள் ஏற்படச்செய்யும். பூஷணங்களின் பிராப்தி வாகன பிராப்தி தரும். புத்திரர் புத்திரிகளுக்குக் கல்வி தேர்ச்சி நல்ல சௌகரியம் தரும் எல்லாக்காரியங்களையும் அரசகண்யத்தில் நடத்திவரும். பொதுநலம் செய்தல் பாராட்டப்படுதல் ஆகும். தாம்பத்தி வாழ்வில் வைதீக ஆசார விதிமுறைகள் பேணுதல் ஆகும். ஆகஸ்டு 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

4 கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் காரியங்களின் தேவைக்கு ஏற்ப வந்து நிறையும். இலட்சிய போக்கில் சில சமூக நலகாரியங்களுக்கும் ஸ்திரிவழியின் நலன்களுக்கும் முக்கிய செலவினையும் ஏற்கும். நல்ல பூஷணம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் லேவாதேவி மற்றும் கடிதப் போக்குவரத்துகளில் ஜூலை 23 தேதியிலிருந்து புதுமையான சம்பவங்களும் நல்லன ஏற்படுதலும் ஆகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஆகஸ்டு 7, 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

5 சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அரச கண்யம் குடும்ப சுப விஷயங்களில் அடுத்தடுத்துச் செலவினம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஓர் பூமி பாக்கியம் வலுவில் வரும். நல்ல பூஷணம் வாங்குதல் ஆகும். புத்திரர் பௌத்திரர்களின் நலன்களில் நல்ல முதலீடுகளைச் செய்யும். உயில் எழுதிவைப்பதுபோன்ற சம்பவங்களை உண்டுபண்ணும். ஆனால் தெய்வபக்தியில்கொண்டு செயல்படுத்த வேண்டும். தாம்பத்திய வாழ்வு வைதீக நெறியில் இருந்து வரும். ஆகஸ்டு 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் நான்கு வகையில் வந்து நிறையும். கம்பியூட்டர் சாதனம் டெலிவிஷன் மோட்டார் வாகனம் போன்ற புதுமை

பொருள்களில் அனுபோக பிராப்தியையளிக்கும். ஆகஸ்டு 9 தேதியில் குடும்ப நல விஷயங்களில் நல்ல ஏற்பாடுகளைச் செய்து வைக்கும். குதூகலம் நிலவும். திடீர் விபத்து ஒன்று வந்து தெய்வ பலனில் தப்பும். தாம்பத்திய வாழ்வில் மனம் ஒத்த நிலைமை ஆகும். ஜூலை 17, ஆகஸ்டு 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்து மூலவிஷயங்களில் நல்லன ஏற்படும். நான்கு வகை பிர விருத்திகளை ஏற்படுத்தித் தரும். ஜூலை 23 தேதியில் ஒர் திரண்ட பொருள் கைக்கு வரும். நல்ல ஒப்பந்தம் ஏற்படும். இருப்பிட வசதிக்கு ஆகஸ்டு 5 தேதியில் மாற்று ஏற்பாடு நடக்கும். எல்லாக் காரியங்களையும் திட சித்தமாக நடத்த ஏதுவாகும். ஜெயபிராப்தியை உண்டுபண்ணும். ஜூலை 18, 19, ஆகஸ்டு 15, 16, தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் நிரம்ப வரும். குடும்ப சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஸ்திர சொத்துக்களில் நல்ல ஏற்பாடும் நடந்து கொண்டிருக்கும். சகோதர புத்திர புத்திரிகளுக்கு விசேஷ பலனை உண்டு பண்ணும். நற்பாக்கியம் தரும். ஜூலை 23 தேதியில் செய் தொழில் உத்தியோகத்தில் சிறப்புப் பலனை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களையும் வெற்றியாக நடத்தச் செய்யும். சத்துருபங்கம் ஆகும். வியாதி குணமாகும். தாம்பத்திய வாழ்க்கை ஆசார அனுஷ்டானத்துடன் அமைதியாக நடந்துவரும். ஜூலை 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். மிதமிஞ்சிய செலவினமும் ஏற்படச் செய்யும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷபலனை ஏற்படுத்திவரும். நல்லோர் பிரபலஸ்தர் நல்விஷயங்களில் அனுகூலம் செய்துவருவர். வயிற்றில் கொதிப்பு நலிவு ஏற்படுதல் புத்திரர் அல்லதுபுத்திரிக்கு இரத்தாதிக்க நலிவு ஆகிகுணமாகுதல் ஆகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலமாகும்.

ஆகஸ்டு 8 தேதியளவில் இருப்பிட வசதி ஸ்திரிவழி தனம் வருதல் ஆகிய நற்பலன் அளிக்கும். ஜூலை 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். தக்க செலவினங்களேயும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஜூலை 23 தேதியளவில் விசேஷ நன்மையை ஏற்படுத்தும். நல்லோர் பிரபலஸ்தர் அறிஞர்கள் வரவேற்று ஸ்லாகிப்பர். ஆயினும் நீண்ட நாள் நெருங்கிய தொடர்புடையவர் மனஸ்தாபத்தில் தோற்றமளிப்பர். பின் அனுகூலம் செய்ய முன் வருவர். எல்லாக்காரியங்களேயும் சிறப்பாக நடத்தத்தெய்வ பலம் உள்ளது. தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்க நன்மை ஏற்பட்டு வரும். உறுதிப் பான்மையில் எல்லாக் காரியங்களேயும் செயல் படுத்தும். வாகன சுகம் திருப்தியளிக்கும். பூமி இயந்திர பிராப்தியில் நல்ல ஏற்பாடு நடக்கும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஜூலை 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். சுப செலவினமும் ஆகும். உறுதிவாக்களிக்கும். வெளிப்படைப் பேச்சில் சமாஜத்துக்கு வருவனவாக இருந்தவை தாமதிக்கும். ஆயினும் நல்லனவே ஏற்படும். பசு பாக்கிய பிராப்தி, நல்லவாகனம் தரும். ஜூலை 23 தேதியிலிருந்து வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்புப்பலன் ஏற்படுத்தும். செவ்வாய்க்கிழமை மௌனமும் சைகையுமாக இருந்து செயல்படுவது நலம். தாரம் புத்திரர்களுக்கு நலம் தரும். ஜூலை 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

மதுரைக் கலம்பகம்

வித்துவான் திரு. தா. குருசாமி தேசிகர்,
மதுரை.

முன்னுரை :

திருத்தருமை ஆதீன ஞானப்பண்ணையின் வாவியில் மலர்ந்த பொற்றாமரை போன்றவர் குமரகுருபரமுனிவர். இளமையில் துறந்து வளமைசேர் தருமை மாசிலாமணி என்னும் தேசுறு குரவனின் பதமலர் போற்றிய குமரகுருபரர் இயற்றிய சிற்றிலக்கியங்களுள் மதுரைக் கலம்பகம் வைப்பு முறையில் மூன்றாவதாக வைக்கப்பட்டுள்ளது. கலம்பம் என்ற சொல்லே கதம்பம் என இன்று வழங்குகிறது.

கலம்பக இலக்கணம் :

பல்வேறு பா உறுப்புகளைக் கொண்டது கலம்பக இலக்கியம். அந்தாதித் தொடை மரபுடன் விளங்கும் கலம்பகம் - கலப்பு + அகம் எனப்பிரியும். தொண்ணூற்றாறு வகைப்பிரபந்தங்களுள் ஒன்று. கலம்பகம்பற்றிய செய்திகள் சேந்தன்திவாகரத்தில் உள்ளது; பன்னிருபாட்டியலிலும் இலக்கணம் உள்ளது. பிரபந்த முழு எண்ணிக்கைக் கூறப்படவில்லை; இளம்பூரணர் தொண்ணூற்றாறு எனக் கூறுகிறார். ஆனால் யாவரும் தொண்ணூற்றாறும் இது எனக் காட்டவில்லை. கி. பி. 1738ல் வீரமாமுனிவர் வெளியிட்ட தொன்னூல் விளக்கத்தில் தொண்ணூற்றாறு பிரபந்தங்களையும் முறைப்படுத்திக் கூறியுள்ளார். பலவகை மலர்களும் கலந்தமைந்த கலம்பகமாலை என்பதே சரி.

செய்திகள் :

இலக்கியம் என்பது வெறும் வருணனை மட்டும் உடையதாயிருந்தால் அது முழுமையாகாது. புராணம் - வரலாறு இரண்டினையும் இணைத்துவந்தால்தான் அவ்விலக்கியம் முழுமை

அடையும். இதுபற்றி முதன் முதலாக ஆராய்ந்த டாக்டர் உ. வே. சா. அவர்கள் வழிநின்று சில செய்திகளைச் சிந்திக்கலாம்.

I. மதுரைச் சொக்கநாதரின் திருவிளையாடற் செய்திகள் மதுரைக் கலம்பகத்தில் காணப்படுகின்றன. இந்திரன் பழிதீர்த்த செய்தி 146 ஆம் பாடலிற் காணப்படுகிறது.

II. தடாதகைப்பிராட்டியார் திருமணச் செய்தி 164 ஆம் பாடலில் காணப்படுகிறது.

III. பெருமான் சோமசுந்தர பாண்டியராகி அரசு செலுத்திய செய்தியை 167 ஆம் பாடல் குறிப்பிடுகிறது.

IV. கால்மாறியாடிய திருவிளையாடல் மதுரைக்கலம்பகத்தில் 165 ஆம் பாடலில் காணலாம்.

V. நரியைப் பரியாக்கிய வரலாறு 175ஆம் பாடலில் காணப்படுகிறது.

VI. உலவாக்கோட்டை அருளியது. மேகத்தைத்தளையிட்டது முதலிய திருவிளையாடற் செய்திகள் நயம்படக் கூறப்படுகின்றன.

தமிழ்நயம் :

'பழியஞ்சும் சொக்கர்க்குரிய பெயரினைச் சுட்டிக் காட்டிய முதல் வாக்கியம் - 'பழிக்கஞ்சிய சொக்கே நின்தாளே துணை' - எனக் குருஞானசம்பந்தர் அருளியதனைக் குமரகுருபரர், 'பழி யஞ்சுஞ் சொக்கருக்குப் பெண்பழிகொள்பாவமே பாவம்' என்று கலம்பகம் நயம்படக் கூறுகிறது.

மதுரைக் கலம்பகம் ஞானசம்பந்தரை நினைவூட்டுகிறது. அவர் கூன்பாண்டியர்க்குச் சுரநோயும் கூனும் தீர்த்தார்; தலைவி கூற்றாக அமைந்த பாடலில் என் உடலில் தோழி திருநீற்றைத் தடவுகிறாள்; ஞானசம்பந்தர் நோயும் கூனும் தீர்த்ததுபோல என் காமவெப்பம் தீரவில்லை; மன்மதனின் வில்லின் கூனும் நிமிர வில்லை என ஒப்பிட்டுப் பேசித் தமிழ்நயம் சுட்டப்படுகிறது.

சித்திவிநாயகர் மதுரைத்தலத்து விநாயகர். அவர் அன்பர் வேண்டுவனவற்றைத் தாமே உணர்ந்து அருள்புரியவராதலின் அவர்பால் இன்பம் நல்குக என வேண்டல் தேவையில்லை என்பதனை - 'சித்திவிநாயகர் சேவடியே உதவு என்பது ஏன்?' - என்ற வினா உணர்த்தும்.

அங்கயற்கண்ணம்மை நாணத்தால் தலைகவிழ்ந்து நிற்பசி சொக்கநாதர் ஊர்தோறுந் திரிந்து முடைத்தலையிற் பலி கொள்ளுதல் அழகன்று என்று மதுரைக்கலம்பகம் 108 ஆவது பாடலில்,

"கானேறும் குழலைசரியச் கர்ப்பூர வல்லிதலை
கவிழ்ந்து நிற்ப
ஊனேறு முடைத்தலையிற் கடைப்பலி கொண்டூரூர்புக்கு
உழலுமாறு''

என்று சமத்காரமான விண்ணப்பம் காணப்படுகிறது.

கலம்பக உறுப்புகள் :

இளைஞரின் கூற்றமைந்த மதங்கியார், பிச்சியார், கொற்றியார், இடைச்சியார், வலைச்சியார் என்பவை கலம்பக உறுப்புகள். மதங்கி என்பவள் வாள் சுழற்றி ஆடுபவள்; பிச்சி என்பவள் சிவவேடம் புனைந்து வருபவள்; கொற்றி வைணவ வேடத்தினள்; இவை மட்டுமின்றி, மறம், குறம், சம்பிரதம், சித்து, களி, ஊர், அம்மானை, ஊசல், பாணாற்றுப்படை, உறுப்புகளும் கலம்பகத்தில் அமையும். மறம் என்பது மறச்சாதியினர் வீரம் கிளப்பது; குறத்தி குறி கூறுவது குறம்; செயற்கரிய செய்வதாக வாய்வீச்சுக் காட்டுவது சம்பிரதம்; இரசவாதம் செய்யும் ஆற்றலைக் கூறுவது சித்து; கட்குடியன் கூறுவதாக அமைவது களி; பாட்டுடைத் தலைவனது ஊரை சிறப்பிப்பது ஊர்; அம்மானை ஊசல் மகளிர் விளையாட்டுகள்; அம்மானை மூவர்பாடுவதாக அமைவது - இவ்வாறு டாக்டர் உ. வே. சா. தமதுகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டில் ஆராய்ந்துள்ளார்.

முதற்கற்பு :

கற்புநெறி என்பது கணவன் வழிநிற்றல். இதனைச்சிந்தியார் "எத்திறம் ஈசந்நிற்பாள் - அத்திறக் அவனும் நிற்பன்'' என்ற வரி விளக்கா நிற்கும் மதுரைக்கலம்பகத்தின் முதல்திருபாட்டுதரவாக அமைந்துள்ளது; பூமிதேவியும் திருமகளும் தத்தம் இடத்தை விட்டுவந்து அங்கயற் கண்ணம்மைக்குப் பணிபூண்டனர்; திருமால் திருமார்பு திருமகளுக்கும், துடைபூமிதேவிக்கும் உரியன; இவர்கள் கணவன் ஏவற்படி குலதெய்வத்தைவணங்கினர்; இது தலைமையா கற்பாகும். தொல்காப்பிய நெறிப்படி கணவன் வழிநின்று குலதெய்வத்தை வணங்குதல் கற்புடைய மகளிர்க்கு இயல்பாகும் இச்செய்தியை மதுரைக் கலம்பகம்,

" நறைக் கஞ்சத் தஞ்சாயற்றிருந்திழையும்
மனைக்கிழவன் திருமார்பு மணிக்குறங்கும் வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு முதற்கற்பின் தலைநிற்ப "

என்று உணர்த்துகிறது.

சங்கச் செய்தி :

மதுரையில் சங்கம் இருந்தமையால் தமிழ் ஆராயப்பட்டது. வடகலை முதலிய பலவகைக் கலைகளை ஆராய்ச்சி செய்வார் இருந்தனர் என்பதை 'வடகலை யலபல கலையொடு தமிழ்வளரும் கூடல்' என்று சங்கச் செய்தியும் 'பாட்டுக்குருகும் பைந்தமிழ்ச் சொக்கன்' என்றும் மதுரைக் கலம்பகம் கூறுகிறது. 'அறம் வளரும் தமிழ்க்கூடல்' என்பதால் அறச்சிறப்பும், - செய்யாள் செய்சரக் கறையாந் திருவாலவாய்' - என்று கலம்பகம் கூறுவதால் பொருட் சிறப்பும் உடையது மதுரை என்று கூறப்பட்டது.

வந்தியின் தலையன்பு :

மதுரை நகர்ச்சிறப்பில் வந்தியின்பு மதுரைக் கலம் பகத்தில் பாராட்டப்படுகிறது. பிட்டுவாணிகம் செய்யும் வந்தியம்மை சிவபூசைச் செல்வியாக விளங்கியதோடு பிட்டு நைவேத்தியம் செய்து - முதற்பிட்டை இறைவனுக்கு வழங்கித் தலையன்பு நிலை புலப்படுத்திய வரலாற்றை மதுரைக் கலம்பகம்,

" அரும்பிட்டுப் பச்சிலையிட்டாட் செய்யு மன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே"

எனக் கூறுகிறது.

திருக்குறள் கருத்து :

ஐம்புலன்களின்கண் செல்லுதலால் உண்டாகும் சுவையை அறியாத செம்பொருட் செல்வர்-என்று மதுரைக் கலம்பகம் கூறுவது பொறிவாயில் ஐந்தவித்தான்' என்று திருக்குறளுக்குப் பதசாரமாக அமைந்துள்ளது; செம்பொருள் என்று திருக்குறள் இளக்கும் பெயரைச் சொக்நாதர்க்கு அமைத்த மதுரைக் கலம் பகம் பாராட்டுகிறது. செம்மாப்பு - என்பது இறுமாப்பு. இவ்விறு மாப்பு 'இறுமாந்திருப்பன் கொலோ' என்ற திருவங்கமலையால் விளங்கும்.

குமரகுருபரர் பாணி :

ஒவ்வொருவர்க்கும் ஒவ்வோரியல்புண்டு. அதனைப்பாணி என்பர். பண்டாரமும்மணிக்கோவையில் குமரகுருபரர் குரவனுரை நோக்கித் தருமை நமலியாகவாவது பிறக்க வேண்டியதுபோல. மதுரைக்கலம்பகத்தில் இறைவனை நோக்கி வேண்டுவதில் தமது முத்திரையைப் பதியவைக்கிறார் - நின்திருவடிப் பணிக்குச் சிறந்த பொருள் ஒன்றும் கிட்டாதொழியினும் ஆகும்: நிலையா வன்றி வேறொரு கடவுளுக்கே பயன்தரும் தலைமை இருப்பினும் இருக்க:

"குறுகி நின் - சிற்றடியார்க்கே குற்றேவலைக் கொண்டு
அம்மா கிடைத்தவா என்று
செம்மாப்புறூஉந் திறம்பெற்ற பொருட்டே"

என்று மதுரைக்கலம்பகத்தில் 'குருவே உன் குற்றேவல் செய்வேன்' என்ற சுந்தரர் திருமுறையின் சாயல் பிரதிபலிக்கிறது.

புயவகுப்பு :

மதுரைக் கலம்பகத்தில் புயவகுப்பு சந்தக் குறிப்போடு அமைந்துள்ளது. புலால் நாற்றம் வீசுகின்ற பற்களில், தான் உண்ட இரத்தத்தோடு உலவுகின்ற நரசிங்கத்தின் வீரம் ஒடுங்கச் சரபாவதாரம் எடுத்து ஒழித்த வரலாற்றையும், திருஞான சம்பந்தர்க்குத் தாளம் வழங்கிய பெருமையும் புயவகுப்பில் கூறப்படும் பகுதி தமிழ் நடையின் மிடுக்கினைக் காட்டுகிறது.

"புலவெயி றயிறரு குருதியொ டுலவு
மடங்கலின் வீர மொடுங்கத் துரந்தன
புகலியர் குரிசிற் பணொடுதமி ழருமை
அறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன"

என்ற புயவகுப்பின் வரிகள் ஓதிமகிழத்தக்கது.

அம்மானை :

மூன்று மகளிர் தம்முள்வாதம் செய்து அம்மானை பாடுவது. இதில் முதல் இரண்டடியும், அடுத்த இரண்டடியும், ஈற்றடியும் தனித்தனியே ஒவ்வொருத்தி கூறுவதாக அமையும்; இப்பாடலில்

அங்கம் வெட்டிய திருவிளையாடல் உணர்த்தப்படுகிறது. தோற்ற வருக்கு அல்லாமல் வென்றவருக்கு உடம்பு இரு கூறதற்குக் காரணமில்லை என்ற பொருளில்,

" விருதுகட்டி யங்கம் வெட்டி வென்றனரே யாமாகில்
அருமையுடம்பு ஒன்று இரு கூறுவதே னம்மானை
ஆனாலுங் காயமலை யையரவர்க் கம்மானை "

என அமைந்துள்ள வரிகளில் இரட்டுறமொழிதலைக் காணலாம். மடக்கணியில்,

" கொடுப்பதையர் கடம்பவனத்தையே
கொள்வதையர் கடம்பவனத்தையே."

என்ற வரியில், கொடுப்பது ஐயர்கள் தம்பவனத்தை - என்றும், ஐயர் கொள்வது கடம்பவனமாகிய மதுரையை என்றும் பொருள் கொள்ளும்படி அமைந்ததில் சிவபெருமான் சிவபதம் நல்கும் வரலாறு சுட்டப்படுகிறது.

சித்து :

கலம்பக இலக்கியத்தில் 'சித்து' என்னும் உறுப்புக் கவிஞர் உளத்தைக் காட்டுவது. எல்லாம் வல்ல சித்தருக்கும் தனக்கும் உள்ள வேறுபாட்டைச் சித்தன் தெரிவிக்கும் பகுதி சிந்திக்கத் தக்கது. 'கருப்பை முன்கல்லானைக்கிட்ட சித்தர்யாம் - கையிற் செங்கல் பசும்பொன்னதாக்கினேம்' - என்ற வரியில் சித்து நிலை பேசப்படுகிறது.

மறம் :

கலம்பகத்தின் மற்றோர் உறுப்பு மறம். இது மகட்பாற்காஞ்சி எனப்படும். 'மறக்கொடியை வேட்பான் – மணம்பேசி வரவிடுத்து வார்த்தையது சொன்னாய்' - என்ற தொடரில்

" திருமுகத்தில் எழுத்திதுவேல்
திருமுடியில் எழுத்தும்,
தேர்ந்தறியக் கொண்டுவா
சிலையிரெடுஞ் செக்றே "

என்றும் கூறும்பகுதியில் திருமுக எழுத்தும், திருமுடி எழுத்தும் கூறுவது நயப்பகுதி.

எளியர் :

இறைவன் எளிவந்த தன்மை ஆராயப்படுகிறது. எதனையும் அமியராகிய இறைவன் நம்பொருட்டு எளியராகிறார். 'எளிவந்த பிரான்' என்று சுந்தரர் கூறுவர். ஈண்டு, கலம்பகத்தில் சோம சுந்தரக்கடவுள் மாபாதகந்தீர்த்த திருவிளையாடலையும், கரிக் குருவிக்கு அருள் செய்த திருவிளையாடலையும் எடுத்துக்காட்டி எளியவர்களுக்கு எளிமையாக உள்ளாய் என்று கூறப்படுகிறது.

" இருபெருங் குரவரின் ஒருபழிசுமந்த
புன்தொழில் ஒருவற்குப் புகல் இன்மை தெரிஇ
அன்றருள் சுரந்த தொன்றோ சென்றதோர்
வலியாற் கருள்வதூஉ நோக்கி
எளியார்க் கெளியைமற் றென்பது குறித்தே "

என்ற கலம்பகப்பாடல், "எளியார் எங்குளார் என்று தேர்ந்து தேர்ந்து, அளியை யாவது உன்னருளின் வண்ணமே" என்ற திருவிளையாடல் வரியை நினைவுறுத்தும்.

தமிழ் உணவு :

சிவபெருமான் சோமசுந்தரனாகவும், உமாதேவி தடாதகைப் பிராட்டியாகவும், குமரவேள், உக்கிரகுமாரனாகவும் மதுரைக்கு எழுந்தருளிய காரணத்தைக் கலம்பகந்தான் கூறுகிறது! தண்டமிழ் உணர்வு தமிழ்மதுரைக்குவரவழைத்தது. இதனைத்,

"தண்டமிழ் மதுரம் கூட்டுணவெழுந்த வேட்கையால் எனில் இத் தொழிதமிழ்ப் பெருமையாரறிவார்"

என்று மூவரும் தமிழ் உணவுக்காக மதுரைவந்த வரலாறு உணர்த்தப்படுகிறது.

முடிவுரை :

மதுரைக்கலம்பகத்தில் இந்திரவிமானம் இயம்பப்படுகிறது. திருநாவுக்கரசர் முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி என்ற தேவாரம் அப்படியே ஆராயப்பட்டு மதுரைக்கலம் பகத்தில், "முளையின்று முளைத்த மூலலிங்கம்" என்று கூறப்பட்டது; வேதபுருடன் பிரமன் - வியாசன் ஆகியோரும், விராட்புருடனும் பேதைப்பாலர்; அவர்கள்பால் சிவத்தின் தன்மை நிகழ்த்தல் அரிது.

அவர்களினும் தகுதியாற்குறைந்த எம்மனோர்க்கு நிகழ்ந்த உணர்வுதந்தது என் ஆற்றலால் என்று; பெருமானின் தகவினால் அவ்வாற்றல் நிகழ்ந்தது, ஆகலின் திருவருள் வாழ்க! நின் பெருமையை நினைதற்குக் கருவியாகிய மனமும் பாடுதற்குக் கருவியாகிய நாவும் வாழி - என்று கலம்பகம் வாழ்த்தோடு நிறைவடைகிறது. நாம் அவ்வாழ்த்தினைக்குமரகுருபரர்வழிநின்று

"............எம்மனோரும்
நினையவும் சிலசொற்புனையவும் புரிதலின்
வாழிய பெரும நின்தகவே,
வாழிஎம் மனனும் மணிநாவுமே"

என்றவரிகளை ஓதி மதுரைக் கலம்பகம் முற்றிலும் உணர வாய்ப்பைப் பெறுவோமாக.

கிள்ளை விடுதூது

புழுகுநெய்ச் சொக்கர் அபிடேகச்
சொக்கர்கர்ப் பூரச்சொக்கர்
அழகிய சொக்கர் கடம்ப
வனச்சொக்கர் அங்கயற்கண்
தழுவிய சங்கத் தமிழ்ச்சொக்கர்
என்றுஎன்று சந்ததம்நீ
பழகிய சொற்குப் பயன்தேர்ந்து
வாஇங்கு என்பைங்கிளியே.

— மதுரைக் கலம்பகம்.

ஆடி மாதச் சிறப்பு நாட்கள்

17—7—90 செவ்வாய், ஆடிப்பண்டிகை. கிருத்திகை விரதம், தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

18—7—90 புதன், வேளூர் கிருத்திகை. ஏகாதசி விரதம். கரிநாள்.

19—7—90 வியாழன், குருப் பிரதோஷம்.

20—7—90 வெள்ளி, மாத சிவராத்திரி. சீகாழி, திருக்கடவூர் வேளூர் முதலிய தலங்களில் சந்தனக்காப்பு நவசக்தி அருச்சனை. கூற்றுவ நாயனார் குருபூசை,

21—7—90 சனி, சர்வ அமாவாசை. திருவையாற்றில் இரவு ஸ்ரீ அப்பர் சுவாமிக்குத் தென்கயிலாயதரிசனம். ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் காட்சிகொடுத்தருளல். தருமை 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கயிலை கண்ட நாள். ஆதின மடாலயத்தில் திருக்கயிலாயமலைத் திருவுருவப்பட ஆராதனைவிழா, இரவுவெள்ளிரதத்தில் திருக்கயிலாயமலைத் திருவுருவப் படம் திருவீதியுலா.

23—7—90 திங்கள், ஆயில்ய விழா.

25—7—90 புதன், திருவாடிப்பூரம். வேளூர், சீகாழி, நாகை, கடவூர், திருவையாறு, மதுரை முதலிய திருத்தலங்களில் ஆடிப்பூர மகோற்சவ தீர்த்தம்.

28—7—90 சனி, பெருமிழலைக்குறும்பர் குருபூசை.

29—7—90 ஞாயிறு, ஆடிச்சுவாதி. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், கழறிற்றறிவார் குருபூசைகள். வேளூர் பவித்ரோத்ஸவ ஆரம்பம்.

2—8—90 கலிய நாயனார், கோட்புலி நாயனார் குருபூசைகள்.

3—8—90 வெள்ளி, பதினெட்டாம் பெருக்கு. வேளூர், திருவையாறு முதலிய தலங்களில் தீர்த்தம். வைசிரா - வரலக்ஷ்மி விரதம்.

4—8—90 சனி, மஹாபிரதோஷம்.

5—8—90 ஞாயிறு, வேளூர் பவித்ரோத்ஸவ பூர்த்தி. பட்டினத்தார் குருபூசை.

6—8—90 திங்கள், பௌர்ணமிவிரதபூசையில் திரட்டுப்பால் அபிஷேகம் சிர-விர-சந்திரகிரஹணம் சாத்திபூர்வ ரிக்யஜுருபாகர்மா.

7—8—90 செவ்வாய், காயத்திரி ஜபம்.

8—8—90 புதன், வேளூர் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் மாகேசுவரபூசை.

9—8—90 வியாழன், சங்கடஹரசதுர்த்தி.

13—8—90 திங்கள், கோகுலாஷ்டமி, காளாஷ்டமி.

14—8—90 செவ்வாய், கிருத்திகை விரதம், தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம், வேளூர் கிருத்திகை, ஆடிமாதம் கடைச் செவ்வாய், வேளூர் ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள். மூர்த்தி நாயனார், புகழ்ச்சோழநாயனார் குருபூசைகள்.

வெளிநாடு Regd. No. TN / M.M.

தருமை ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல்

1.	காரைக்கால் அம்மையார் திருமுறை	ரூ. 1—60
2.	திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி	0—50
3.	கந்தர்கலி வெண்பா	0—60
4.	சொக்கநாத வெண்பா	2—00
5.	சிதம்பரம் திருப்பதிகங்களும், ஸ்ரீசபா நாயகர், ஸ்ரீ சிவகாமி அம்மை தோத்திரங்களும்	4—50
6.	விநாயகர் அகவல்	1—50
7.	சமயாசாரியர், சந்தாஞசாரியர் வரலாறும் தோத்திரங்களும்	5—00
8.	தில்லைச்சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	1—00
9.	பண்டாரமும்மணிக்கோவை	1—50
10.	திருவெழுகூற்றிருக்கை	0—50
11.	நடராஜசதகம்	1—35
12.	ஸ்ரீ குருஞானசம்பந்தர் சமூகமாலை, திருப்பள்ளி எழுச்சி	1 60
13.	புவனம்பிகை கலைஞானதீபம்	1—25
14.	சிகாரத்தினமாலை	0 - 65
15.	ஸ்ரீ குருஞானசம்பந்தர் அட்டகம்	3—00
16.	சிவபராக்கிரமக் கலிவெண்பா	0—50
17.	சமய இலக்கியம்	3—00
18.	சமய இலக்கியம் (தொகுப்புநூல்)	1—75

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :—

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
தருமபுரம் - மயிலாடுதுறை 609001.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram,
at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-7-90